
உ
பிரம்மனே நம:

2½-3

ஸ்ரீ ஆதி சங்கரர் வாழ்க்கை

(ஆறு இந்துமதம், அத்வைதம், புதுப்பித்தல்)

A. No. 18086
R65 : அ3



த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ பந்துஸ் ச குருஸ்த்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தேவதேவ


ஓம் ஷண்மத ஸ்தாபனா சார்யாய நம:
ஓம் அத்வைத ஸ்தாபனா சார்யாய நம:
ஓம் குரு பூமண்டலா சார்யாய நம:

சகல உபநிடதங்களும் பசுக்களாம். ஸ்ரீ கிருஷ்ண பகவானனவர் கறக்கிறவராம். அருச்சுனன் கன்றும். பிரம்மசிஞ்ஞாசையுள்ள புத்திமானே அநுபவிக்கிறவனும் பாலானது பெருமையுள்ள தேவாமிர்தத்திற்கொப்பாகிய கீதையாம்.

மனம் வாக்கு காயமென்னும் முக்கரணங்களால் கல்வி கேள்வி தவம் ஒழுக்கங்களாற் சிறந்ததோர் மகானுபாவர்.

சாதகராயினோர் எவற்றை ஞானநிமித்தம் பிரயத்தன பூர்வமாகச்சாதிக்கின்றனரோ அவைகளே சாத்தியர்க்கு ஞானிகளுக்கு சுபாவசித்த இலக்கணமாமாம். ஈசுராராதன ரூபமான நிஷ்காம கர்மமானது ஏகாகாரமாம், சொற்பமேயானாலும் பாவக்ஷய ரூபமானது ஓர்போதும் நாசமடையாதது சுக துக்கத்தில் இராகத் துவேஷங்களில்லாமையே சமத்துவமாம்.

முக்கிய புருஷார்த்தமான சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப்பிராப்தி வடிவ வீடுபேறு குருவருளும் திருவருளும் நிறைவதாகுக.



7-4-87 திருக்கடையூரில் '60 ஆண்டு மணிவிழா மலர்'
9-6-88 JKK சம்பூரணி குருபூஜையில் 'தசோபநிஷத்' (தமிழ்)
19-6-89 குருபூஜையில் 'ஆத்மசாதகன் ஆரம்ப விசாரணை'
25-4-90-ல் சங்கரர் ஜயந்தி விழாவில் ஸ்ரீ ஆதிசங்கரர் வாழ்க்கை

ANDAVAR A. N. LIBRARY, KOVILOOR
18086
26-3

உ
சிவமயம்

முன்னுரை

பூ உலகின் கண்ணே மக்கள் வாழும் நாடுகள் அநேகம் உள்ளன. அவற்றில் பொருளாதாரம், ஜனநாயகம், அரசியல், சர்வாதிகாரம் மன்னர் ஆட்சிமுறை, மத அடிப்படை கொண்டதும், கொள்ளாததும், நாகரீகம் பக்தி கருமம் விஞ்ஞானம், இராணுவபலம் உணவுப்பொருள் உற்பத்தி இரும்பு, நிலக்கரி கல்லெண்ணெ (பெட்ரோல்) மண்ணெண்ணெ (கிரேசின்) ஆகியவைகளின் உற்பத்தி, வியாபாரம் இப்படி பல்வேறு துறைகளில் மேற் சொன்னவற்றில் சிலசில தன்னகத்தே கொண்ட தனித்தன்மை பெறும் நாடுகளாக விளங்குகின்றன. இப்படிப்பட்ட தனித்தன்மைச் சிறப்புகளில் நிறைவில்லாத நாடு நமது நாடு. ஆனல்,

அநாதி காலந்தொட்டே ஆன்மீகச்சிறப்பை தனித்தன்மையாகக் கொண்டது நமது பாரதபூமி ஒன்றேயாகும். நமது உண்மைவடிவம் ஏதோ அதுவே ஆன்மா, அதை அறிந்து அதனோடு நிலைத்திருக்கச்செய்யும் முயற்சி எதுவோ அதுவே ஆன்மீக வாழ்க்கை எனப்படும். இத்தகைய ஆன்மீகத்தை அல்லது கடவுளைப்பற்றிக்கூறும் பலமதங்கள் உலகில் இருப்பினும் அவைகள் துக்க கலப்பில்லாத பூரண இன்பம் அடையும் வழிமுறைகளை கூறுதனவேயாகும். நமது உண்மை வடிவ ஆன்மாவைக் (கூடஸ்தனைக்) காட்டி அதற்குப்பின்னமில்லாத உண்மைவடிவ பிரம்மத்தை விளக்கிச் சொல்லி இரண்டிற்கும் கடாகாசம் மகாகாசம் போல ஏக தத்துவத்தை [ஒன்றும் தன்மையை] மிக விளக்கமாக சந்தேக விபரீதங்கள் இல்லாது தெளியச்செய்து அதன்பயனுகிய சர்வதுக்க நிவர்த்திப்பரமானந்தப்பிராப்தி ரூபமுத்தியை இந்த உலகத்திலேயே, இந்தச்சரீரத்திலேயே, இந்தப்பிறப்பி-லேயே அடைய வழி வகுப்பது அத்வைத ஞானம் ஒன்றே ஆகும்.

இத்தகைய அத்வைதக்கருத்துக்களை, இறைவன் திருவருளால் பழங்-கால முனிவர்கள் ஆராய்ந்து கண்ட உண்மைகளைக்கூறி விளக்கும் நூல்களே உபநிடதங்கள் ஆகும். அதன் கருத்தே பிரம்மசூத்திரம் அதன் விளக்கமும் விரிவுமே பகவத் கீதை. ஆகஇம்மூன்றும் சேர்ந்து பிரஸ்தானத்திரயம் எனப்-பெயர் பெறும் இவ்வுயரிய உண்மை காலப்போக்கில் புத்த, ஜைன முதலிய புறச்சமயங்களாலும், காபாலிக முதலான அகச்சமயங்களாலும் மறை-பட்டுவிட்டது. அதன்காரணமாக மேற்படி முத்திப்பயனை அடையவோ, அதைப்பற்றி தெரிந்துகொள்ளவோ முடியாத நிலையில் நமது பாரத மக்கள் இருந்தார்கள் எல்லாம்வல்ல சிவபெருமானிடம் இதைப்பற்றி தேவர்கள் கூறினர். அதைப்பரிசிலனை புரிந்த கருணாமூர்த்தியான இறைவன் ஸ்ரீ சங்கர ராக காலடியில் அவதரித்தார். இந்த ஆதிசங்கரர் மதவாதிகளை வாதப் போரில் வென்ற தன்மையும், தோல்வியடைந்த அவர்களால் செய்யப்பட்ட மந்திரதந்திர ஏவல் காரியங்களிலிருந்து விடுபட்ட முறையும் சந்நியாச குரு சிஷ்ய சம்பிரதாயம் ஏற்படுத்தி இன்றுகாறும் நிலைத்திருக்க நான்கு திக்குக-ளிலும் நான்குமடங்களை உண்டாக்கி அவைகளை பரிபாலனம் செய்ய மந்திர தந்திர, யந்திரம் மற்றும் பொருள் வசதி முதலியனவும் நிலைபெற வழி வகைகளையும் செய்தார். மற்றும் பக்தி மார்க்கத்துக்குரிய சாத்திரங்களையும்

படைத்தளித்தார்; இவ்வளவும் தமது 32 ஆண்டு ஆயுட்காலத்திலேயே நிகழ்ந்தனவாகும். குமரிமுதல் இமயம் வரை யாத்திரை செய்து அநேக அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார் என்பது சாமானியச்செயல் அல்ல செயற்கரிய செய்த அப்பெருந்தகை ஸ்ரீ ஆதிசங்கரர் இல்லையேல் இந்து மதமும் அதன் வேராக (மூலமாக) உள்ள அத்வைதமும், அதற்குச்சாதனங்களாக உள்ள கர்மம் பக்தி ஆகிய இரு மார்க்கங்களும் சிதைவுபட்டு இருக்கும் அதன்காரணமாக நமது பாரதநாட்டு மக்கள் மாலுமி இல்லாத படகுபோல அழிந்துபட்டிருப்பர் என்பது திண்ணம்.

இப்படிப்பட்ட ஸ்ரீ ஆதிசங்கரர் வாழ்க்கை வரலாறு பற்றி விரிவாய் அறிந்துகொள்ள முடியாத நம் மக்களுக்கு சுருக்கமாக எழுதி வெளியிடுங்கள் எனக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, குமாரபாளையம் கொடை வள்ளல் பேரன்புமிக்க உயர்திருவாளர் **J. K. K. முனிராஜா** அவர்களின் பாவா மானேஜர் திரு. **R. T. P. இராமநாதன் செட்டியார்** அவர்கள் அவ்வாறே எழுதி தமது பொருட்செலவில் அச்சிட்டு தமது ஞானநூல் தான வரிசையில் நான்காவது நூலாக 25-4-1990 ல் குமாரபாளையம் ஆனந்தாஸ்ரமத்தில் நடந்த 5-ம் ஆண்டு ஸ்ரீ ஆதிசங்கர ஜெயந்தி விழா ஆரம்ப தினத்தில் வெளியிட்டு இலவசமாகவே கொடுத்தார்கள் அண்ணருக்கு நன்றியும் வாழ்த்துக்களும் உரியன ஆகட்டும். அவர்களுக்கு அரோக திடகாத்திரமும் நீண்ட ஆயுளும் ம் கொடுத்து இன்னும்பல ஞானநூல் தானங்களைச்செய்ய எல்லாம்வல்ல இறைவன் இன்னருள்புரிவாராக.

இந்நூலைப் படிக்கும் பாக்கியவான்களுக்கும் ஆண்டவர் அருள்புரிவாராக

வேணும் ஸ்ரீ சற்குருநாதன் துணை
சோம. கோபாலசுவாமி

16—4—1990
ஆனந்தாஸ்ரமம்
குமாரபாளையம்
சேலம் மாவட்டம்.

மலர் தொகுத்து வெளியிடுவோர் முகவுரை :-

அக்ஷய வருடம் பங்குனி மாதம் [1927] ஸ்ரீ ராமநவமி அன்று பவானியில் பிறந்து கல்லூரிக்குப்பின் நூற்பு தொழிற்கல்வி படித்து 34 வருடங்கள் பொதுமேலாளராக நூற்பு மில்லில் சேவை செய்து ஓய்வு பெற்றுள்ளேன் பஞ்சு அதிகம் உற்பத்தியாகும் குஜராத், மஹாராஷ்டிரம், பஞ்சாப் முதலிய இந்தியா எங்கும் பஞ்சு கொள்முதல் செய்ய பலமுறை சென்றுள்ளேன். தொழில் முன்னேற்றங்களை நேரில் கண்டறிய நானாகவே மேற்கு நாடுகள் ரஷ்யா, இங்கிலாந்து சென்றுள்ளேன். நெரூர் தவத்திரு சதாசிவானந்த ஸ்வாமிகள், ஸ்வாமி தேஜோமயானந்தா அவர்கள் கொமாரபாளையம் ஸ்ரீலஸ்ரீ சோம கோபால ஸ்வாமி அவர்கள் ஆகியோரின் சில வருட தொடர்பால் ஆத்மீகப்பற்று தூண்டிவிடப்பட்டு ஆத்மீக ஞானநூல்கள் தொகுத்து ஞானதானமாக சமர்ப்பித்து வருகிறேன்.

செய்கையில் கடைமையும் உள்ளத்தில் அன்பும் எப்போதும் வேண்டும்.

R T P இராமநாதன் பொது மேலாளர்,
436, சேலம் மெயின் ரோடு, கொமாரபாளையம்-638 183.

உ

ஸ்ரீ பரப் பிரஹ்மனே நம :

ஸ்ரீ ஆதி சங்கரர் வாழ்க்கை

26-3

ஆறு உட்பிரிவு

இந்துமதம் அத்வைதம் புதுப்பித்தல்

பெண்மைபாதிய னென்பெயர் பெயர்க்கவோ விடத்தை
யுண்மையார்கள னென்பதை யொழிக்வோ வுலகில்
வெண்மைமாமலே விட்டொரு விரத்தனுய்ப் போந்தே
தன்மையேதரு சங்கர முனிவனைப் பணிவாம்.

ஸ்ரீ பரப்பிரஹ்மனே நம :

ஸ்ரீ ஆதி சங்கரர் துதி

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

சுத்தவே தாந்த மெல்லாஞ் சொல்லிய பொருள்கள் தம்மை
மெத்தவுங் கருணை யாலே மேன்மைசேர் பாடி யாதி
தத்துவ நூல்கள் கொண்டே தடையறத் தெரிய வைத்த
உத்தமச் சங்க ராசான் உண்மையை யுளத்தில் வைப்பாம்,

அத்துவைத தத்துவ ஞானிகளில் மிகவும் உயர்ந்த உன்னதமான இடம் வகிப்பவர் பகவத்பாதா ஆசாரிய சங்கரர். அவர் அத்வைத தத்துவத்திற்குத் தெளிவான விளக்கம் கண்டதோடு தெளிவாக மக்களுக்கு உணர்த்தி மக்கள் இறைவனின் - இறைமையின் உண்மை உருவொளியை உணர வைத்தவர், இந்த இலட்சிய திருநோக்கத்துக்காக புண்ணிய பாரதம் முழுவதும் விரிவாக பயணம் செய்தார். சங்கரர் திருஅவதாரம் செய்த காலத்தில் பாரத தேசத்தில் புத்தமதம் முழுச்செல்வாக்குடன் திகழ்ந்தது, அன்பு, அகிம்சை, புலனடக்கம், கருணை ஆகிய உயர்பண்புகளை உபதேசித்த பௌத்தர்கள், தெய்வ நம்பிக்கை, தெய்வ வழிபாடு, போன்ற அம்சங்களை முற்றிலுமாக பின்னுக்குத்தள்ளி, கிட்டத்தட்ட நாத்திகத்தன்மை வாய்ந்ததாகவே அமைந்திருந்தது. இந்துமதம் சுயநலமிகள், சந்தர்ப்பவாதிகள், கைகளில் சிக்கி சீரழியத்தொடங்கியது, உயர்வு தாழ்வு,தீண்டாமை உணர்வு,ஒழுக்கச் சிதைவு, பூசல் பிணக்குகள் தலைகாட்டின. தெய்வநம்பிக்கை குறைந்து தெய்வீகம் தொடர்பான, தவருன, குழப்பமான, கருத்துக்கள் நிலவின.

அவைதிகமாகிய துன்மார்க்க வழக்கம் அதிகரித்து, சற்கருமம் பக்தி, மெய்ஞானம் முதலியவைகள் தலையெடுக்கவொட்டாமல் விலக்கி மந்திரம், ஜெபம், ஹோமம், பாவத்திற்கு பயந்து நடக்கும் நடையும், வேதம்

ஓதுதலும், வேதபூஜை, யாகம், முதலியன மிகக்குறைந்ததும் சந்நியாச முடையவர்கள் மிக அருமையாகவும் இருக்கின்றபடி ஆயின. அந்தணர்களின் சிரங்களை வெட்டி வைரவரக்கு பூஜை செய்யும் கபாலிகர்களான பாபிகள் நிறைந்தனர். உலகைப் பாதுகாத்தல் பொருட்டு தோஷமுள்ளவர்களைத் திருத்தவும், அஞ்ஞானத்தினால் ஜனனமரண துக்கத்தில் வருத்தப்படுகிற உயிர்களுக்குப் பிறவித்துன்பத்தை நீக்கியருள கைலாசம் சென்று சிவபெருமானைத்தேவர்கள் வேண்டினர். கிருதயுகத்தில் மஹா விஷ்ணு கபிலாசாரியராகவும், திரேத யுகத்தில் சிவபெருமான் தத்தாத்திரேயராகவும், திரேதா யுகத்தில் மஹா விஷ்ணு வியாஸாசாரியராகவும், கலியுகத்தில் சிவபெருமான் சங்கர பகவத் பாதாசாரியராகவும் ஸ்ரீ பகவான் அவதாரம் எடுத்து வேதார்த்தங்களை விளக்கி ஸாதுக்களை இரட்சித்து பாபிகளை சீர்திருத்தஞ் செய்து தர்மத்தை நன்கு ஸ்தாபித்தருளினார். திருமால் சங்கர்ஷனராகவும், ஆதிசேஷன் பதஞ்சலி என அவதரித்து கருமம் உபாஸனை ஞானம் மூன்றனுள் உபாஸனா கண்டத்தினை விளக்கி பக்தியோகங்களை பரவச்செய்து வந்தனர். சிவபெருமான், ஸ்ரீ குமரக்கடவுளை பட்டபாதாச்சாரியராகவும் ஜெமினி முனிவரின் பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தை ஆதாரமாகக்கொண்டு அதன் கருமகாண்டத்தை நிலைநிறுத்த அருள்புரிந்தார்.

பட்டபாதாசாரியர் புத்தர் முன்னிலையாகவே அவர்கள் நூலையெல்லாம் உணர்ந்து, அவற்றிற்கெல்லாம் மறுதலை எழுதி வெளிப்படுத்தி திக்விஜயஞ் செய்தார். அவர் சுதன்வராஜன் என்ற அரசன் சபையில் '' ஓ குயிலே சுருதிக்கு இதமில்லாமலே கடினமாகக் கத்துகிற தோஷமுள்ளவைகளான நீசத்தன்மையுடைய காக்கைக் கூட்டங்களின் சம்பந்தமில்லாவிட்டால் நீ சிறப்படைவாயன்றோ? என்று கூறினார். அதனால் ஏற்பட்ட மதவாதத்தில் அநேக யுக்திகளினால் புத்தமதத்தை கண்டித்து வேத மார்க்கத்தை நன்கு கூறி ஸ்தாபித்தார். அரச நியதியைப்பற்றி சுதன்வராஜன் போட்ட நிபந்தனை படி, புத்தர்கள் அச்சத்தோடு பின்வாங்கியிருக்க பட்டபாதாசாரியார் மலையுச்சியின் மீது ஏறி ''வேதமே பிரமானமானதால் எனக்கு அணுத்துனை யும் துக்கமின்றி சுகம் உண்டாகுக,'' என்று உரக்கக்கூறி கீழே குதித்தார். அவர் அதனால் துன்பமின்றி சுகமாகவேயிருந்தனர். இந்நிகழ்ச்சியை மணி மந்திர ஔஷத வல்லமை என புத்தர்கள் சாடினர். அரசன் மற்றொரு போட்டியை விதித்தனர். கொடு விஷமுடைய ஒரு கரும்பாம்பை ஒரு குடத்தில் அடைத்து இருவகை யாரையும் அக்குடத்தில் இருப்பதை சரியாகக் கூறும்படி வினவினார். புத்தர்கள் தாரகை தேவதையின் அருளால் குடத்தில் கரும்பாம்பு உள்ளது என கூறினர். பட்டபாதாசாரியார் அவர்கள் சூரிய பகவான் அருளியபடி, அனந்தசயனராகிய விஷ்ணு இருக்கிறார் என்று கூறினார். அரசவையில் அப்போது கேட்ட அசரீரி வாக்குப்படி குடத்தினுள் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் பதுமையைத் தரிசித்தனன். அரசன், போட்ட நிபந்தனைப்படி, வேதத்திற்கு விரோதிகளான புத்தர் முதலிய நாஸ்திகரனைவரையும் கற்கானத்திலிட்டுக் கொள்ளும்படி கட்டளையிட்டான். அதன்பின் வைதிகக் கருமங்கள், தான தரும உபகாரங்கள், நல்லறங்கள் விருத்தியாகி கருமமே தலைமையாய், தருமமே புருஷார்த்தமுமாகிய உறுதிப்பொருளாயிருந்தன; பிரம்மஞானம் இல்லாமலே அநாதியாக வந்த அஞ்ஞானதி

துன்பங்களை அனுபவித்து, ஜனனமரண சமுசார சாகரத்தில் மூழ்கிச் சாந்தி இன்றிக் கிடந்தார்கள்,

கருணைக்கடலாகிய தாமே ஆபத்பாந்தவராகத் தோன்றி இந்து மதத்-தையும், சமுதாயத்தையும் பேரழிவினின்றும் காத்தவர் ஆதிசங்கரர் என்று ஒரு உண்மையான திடநம்பிக்கை ''நாம் கண்களால் காணக்கூடிய உலகம் ஒரு பொய்த்தோற்றமே தவிர உண்மை அல்ல. பிரம்மமே சத்தியமான நித்தியம் பிரம்மம் என்பது ஜீவனுக்குத்தொலைவாக உள்ள அந்நியம் அல்ல? ஜீவனுக்கு அதிஷ்டானம் ஆன கூட-ஸ்தன்-பிரம்மமே ஆகவே,பிரம்மம் வேறு ஜீவன் வேறு அல்லவே அல்ல' இந்த உண்மைதான் அத்வைத சித்தாந்தத்தின் உயிராகும். இந்த அடிப்படைத் தத்துவத்திற்கு ஒரு விளக்கமாகவே ஆதி சங்கரர் அவதரித்தார்.

மலையாளத்தில் சூர்ணுநதி என அழைக்கப்படும் ஆலவாய்ப்புழை என்ற சிற்றூற்றங்கரையில் காலடி என்ற சிறிய கிராமத்தில் வசித்த சிவகுரு ஆரியாம்பிகை என்ற நல்லொழுக்கம் நற்பண்புகள் நிறைந்த தம்பதியினருக்கு (நம்பூதிரி பிராமண வம்சம் அத்திரி மஹரிஷி கோத்திரம்) வெகுநாள் வரை குழந்தை பாக்கியம் இல்லை. தினப்படி இறைவனுக்கு நிவேதனம் செய்யும் புனிதப்பிர சா த பண்டங்களைகிராம மக்களுக்கு வினியோகிப்பார்: இனி-மேலா குழந்தை பிறக்கப் போகிறது. உண்டு உண்டு உயிர் வாழ்வதற்காக உயிரை வளர்ப்பதால் என்ன லாபம் என்றெல்லாம் இப்போது தோன்றுகிறது என்னதான் விரக்தி இருந்தாலும் பிறப்பையும், இறப்பையும் பற்றி எண்ண மனிதனுக்கு ஒரு உரிமையும் கிடையாது என்றாள் ஆரியாம்பிகை, திருச்சூர் எனத்திகழும் திருச்சிவப்பேரூர் அப்பன் விருஷாசலேசன் ஆலயத்தில் நோன்-பிருந்து வருகையில் ஈசன் கனவில் இருவருக்கும் தோன்றி 'அருளும் தெளிவும் அன்பான ஆற்றல் படைத்த ஆயுள் குறைந்த மகன் வேண்டுமா? அல்லது நீண்ட ஆயுளையுடைய ஒரு சாமானிய மகன் போதுமா? உனது யோசனைக்கு விட்டேன் என்றார். நனவு நிலைஅடைந்த சிவகுரு ஆரியாம்பா ஆகிய இருவரும் சற்புத்திரனே வேண்டும். ஆயுளைப்பின்னர் தவமிருந்து கூட்டிக்கொள்ளலாம் என்றும், துர்புத்திரனெனில் அவனுக்கும் நம் வீட்டுக்கும், நாட்டுக்கும் கெடுதல், பிதிர்கர்மமும் செய்யான். எனவே வேண்டாம் என தீர்மானித்து சத்புத்திரனையே கோரினர். இதற்கிணங்கி பிறப்புக்கும் இறப்புக்கும் அப்பாற்பட்ட பூரணனுன பரமேஸ்வரன் உலக நியதிகளுக்கு உட்பட்டு நந்தன ஆண்டு வைகாசி மாதம், சுக்கில பட்ஷம் பஞ்சமி திதி, கூடிய நல்லோரையில் நண்பகலில் அவதரித்தார். குழந்தையைச்சூழ்ந்து வீசிய தேஜோமயமான பேரொளியும், தெய்வீக ரேகைகளும் நெற்றியில் காணப்பட்ட மூன்றுவது கண் போன்ற குறியும், விரிந்த தோள்களும் இடைவிடாது வறட்சியாய் பாழாய் அவலமாய் இருந்த அப்பகுதி சுற்றுச்சூழலும் பசுமையாய், செழிப்பாய் மகிழ்ச்சியாய் இனிய தென்றலாலும், கால மழையும் பெருவிளைவும் நோயின்மையும், தரும புத்தியும் உண்டாகி மக்கள் அனைவரும் சந்தோசமா-யிருந்தனர். தேவர்கள் பாரிஜாத மலர் முதலிய புஷ்பங்களால் பூஜித்தல் முதலிய இனிய நறுமணங்களுடன் அநேக அற்புதங்களையும் காட்டி அருளினர் உச்சந்தலை எப்போதும் ஈரமாகவே இருந்தது. மற்றும் சிவகுரு, நம; சங்கராய' என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்து கொண்டிருந்த போது

கொடுக்க வேண்டும் என்றான் கண்ணே நாம் சாப்பிடுகிற ஒவ்வொரு பொருளும் கடவுள் கொடுத்ததுதானே நான் உனக்குப்பால் கொடுத்தாலும் அதுதேவி கொடுத்த மாதிரிதான் என்றாள். அதெல்லாம் முடியாது என்று பிடிவாதம் பிடித்தவாறு பால் கிண்ணத்தைக் கையில் எடுத்த குழந்தை மகிழ்ச்சி பெருக் குடன் கூச்சலிட்டான். அம்மா பார்த்தாயா? நான் கேட்டதற்காக தேவி எனக்கு பால் கொடுத்திருக்கிறாள் என்று கிண்ணத்தை தூக்கிக்கொண்டு வந்து அன்னையிடம் காண்பித்தான். கிண்ணத்தில் பால் பொங்கி வந்து கொண்டிருந்தது. தாய் அந்த பாலில் ஒரு துளி எடுத்து வாயிலிட்டுப்பார்த்-தாள் வீட்டுப்பசுவின் பாலே அல்ல அது. அந்த பாலின் ருசி மணம் இதுவரை அவள் அனுபவித்தறியாத ஒரு தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது. சங்கரன் மகிழ்ச்சியோடும் விருப்பத்தோடும் பாலைப்பருகினான். அது மண்ணுலகத்துப் பால் அல்ல, தேவி மனமுவந்து அளித்த ஞானப்பால் அது. சங்கரன் தேவி அளித்த ஞானப்பாலை அருந்திய பிறகுதான் வடமொழியாம் சமஸ்கிருத மொழியை ஓதாமலே உணர்ந்தார் என்பர்.

இவ்வாறு தாய்க்கு தன் உண்மை உருவத்தை இலேசாக உணர்வித்த சங்கரன் இதே மாதிரி அனுபவத்தை தந்தைக்கு ஏற்படுத்தி தன்னை அடை-யாளம் காட்டுவித்தான். ஒரு சாமியார் சிவகுருவிடம் ஒரு பூசனிக்காய் கேட்க அவர் கொடுத்தார். சாமியார் வாங்கும்போது பழம் தவறி கீழே விழ அதனுள்ளிருந்து சங்கரர் வெளிவந்தார். மற்றொரு சமயம் ஒருநாள் சங்கரனை தேட எட்டுதிசையிலும் சென்றவர்கள் எட்டு சங்கரனை அழைத்து வந்தனர். குருவாயூரிலிருந்து ஒன்பதாவது உண்மை சங்கரனை மற்றொருவன் கூட்டிக் கொண்டு வர முந்தைய எட்டு சங்கரன்களும் மறைந்து விட்டனர். பஞ்ச பூதங்கள், சூரியன், சந்திரன், ஜீவன் எட்டும் உபாதிகள், பிரதிபிம்பங்களே அல்லது உண்மையானது அல்ல ஓர் ரதோற்சவத்தன்று சங்கரனுக்கும் தரிசனம் செய்து வைக்கலாம் என்ற நோக்கத்தோடு தோள்மீது தூக்கி வைத்துகொண்டு தெருவின் ஓரமாக நின்று கொண்டார். சங்கரா அதோபார் தேரில் நம்மையெல்லாம் படைத்து ஆளும் பரமேஸ்வரன் தேரில் ஆரோக-ணித்து வருகிறார், கைகூப்பி அவரை வணங்கு என்று கூறியவாறு கண்களை உயர்த்தி சங்கரன் சுவாமியை வணங்குகிறானா என்று கவனித்தார், துணுக்-குற்றார். தேரில் ஆரோகணித்து வரும் பரமேஸ்வரன் அல்லவா தோள்மீது அமர்ந்திருக்கிறார், இது என்ன அற்புதம்! ஒரு கணம்தான். அந்த மாயத் தோற்றம் மறைந்து விட்டது. தேர் மீது சங்கரன்தான் காட்சியளித்தான். நாம் நனவோடுதான் இருக்கிறோமா என்று கண்களை கசக்கிவிட்டுக்கொண்டு தேரில் உற்றுக்கவனித்தார் சுவாமி இருக்கிற இடத்தில் சங்கரனல்லவா அமர்ந்து குருநகை புரிகிறான் அந்த மாயத்தோற்றமும் ஒருகணம்தான். சர்வேஸ்வரா நீயே எனக்கு குழந்தையாக வந்து பிறந்து விட்டாய் என்ற உண்மையை நீயாகவே உணர்த்திவிட்டாய். என் ஜென்மம் சாபல்யமடைந்து விட்டது. உன் பாதத்தடியில் சேர்த்துக்கொண்டு எனக்கு உலக பந்தங்களி-லிருந்து விடுதலை அளிக்க மாட்டாயா? என மெய்யுருக வேண்டிக்கொண்-டார். இவர் விரும்பியபடியே சங்கரனுக்கு நான்கு வயதாக இருக்கும்போது சிவகுருவை இறைவன் தன் அடியில் சேர்த்துக்கொண்டார். தந்தையின்

கருமத்தை, சவத்தின்மீது அடுக்கிய விறகுகளின்மீது புல்லேகிள்ளியிட அது தீபற்றி நறுமணம் வீச முடித்தனர்.

சங்கரனுடைய பேச்சு, பாவனை, செயல் முறைகளுக்கு தாயாரால் ஈடு கொடுக்கமுடியவில்லை. அறிவாற்றல் மிளிர அவன் கேட்கும் கேள்விகளே விளங்குவதில்லை, விடையளிப்பது எங்ஙனம்? அவனுடைய ஆன்மீக அறிவு வளர்ச்சி தேக்கமடைந்துவிடுமோ என்ற அச்சமும் ஐந்து வயதில் உற்றுரை வைத்து பிரம்மோபதேசம் பிரயாசைப்பட்டு அன்னே செய்வித்தார். சொந்த பந்தபாச நோக்கத்துக்காக உலகத்தையே உய்விக்க வந்திருக்கும் மகானே வீட்டுச்சிறையிலே பூட்டிவைக்க முடியுமா? ஐந்து வயதில் குருசேவை செய்து கொண்டு வேதசாஸ்திரங்களே பயின்று வந்தார். அப்போது ஒரு நாள் பவதி பிக்ஷாந்தேகி என ஒரு பரமதரித்தரராய் இருந்த அவ்வீட்டு அம்மையார் பிக்ஷான்னம் இடுமளவு புண்ணியம் எனக்கில்லேயே எனக்கூறி வருந்தி ஒரு நெல்லிக்கனியை அன்போடு கொடுக்க அதற்காக ஸ்ரீ சங்கரர் கனகதாரா ஸ்தவம் ஸ்தோத்திரத்தால் ஸ்ரீ லக்ஷ்மி தேவியை ஸ்தோத்திரிக்க முற்பிறவியில்காமிய புண்ணியம் செய்யாதவர்களாயிருந்தும் சங்கரருக்கு ஈந்த நெல்லிக்கனிகளாக சங்கரரின் வேண்டுகோளுக்காக ஸ்ரீ லக்ஷ்மியின் அருள் கிடைத்து தங்க நெல்லிக்கனிக்காக அவ்வம்மையாரின் வீட்டில் கொட்டியது. ஏழு வயது பூர்த்தியடையும் முன்னரே வேதம் வேதாந்தம், ஸ்மிருதிகள், சாஸ்திரங்கள் புராணங்களில் தேர்ச்சி பெற்றுத்திகழ்ந்தார். துறவு நெறி பற்றிய சாஸ்திரக் கருத்துக்களில் அக்கறை காண்பித்தான், தோண்டித்துருவி வினக்களே எழுப்பி ஐயங்களே தீர்த்துக் கொண்டார். பிரமசாரிய வாழ்க்கையின் இலட்சிய புருஷனுக, ஆசிரம நெறிமுறைகளே சங்கரன் அளவுக்கு அவ்வளவு சரியாகவும், ஒழுங்காகவும், வேறு யாருமே கடைபிடித்ததில்லே என்ற பெருமையும், புகழும்கிடைத்தது. எட்டு வயதிற்குள் எல்லாவிதமான வேத சாஸ்திரங்களேயும் கரைத்து குடித்து கரைகண்டு விட்டார். குருகுலவாசத்தை முடித்து வீடு திரும்பினுர்.

ஆரியாம்பிகை கனவில் சங்கரன் துறவியாவதாகக் கண்டு பிரிவுக்குப் பயந்து மிக வருத்தமுற்றுள். கனவு கூட ஒரு வகையில் கற்பனேபோலத்தானே என்றுர். உலகத்தின் பாவங்களேக்கழுவிப் புனிதபடுத்தும் நோக்கில் பாய்ந்தோடும் கங்கை நதியை அது எனக்குத்தான் சொந்தம் என்று கூறி ஒரு கட்டுக்குள் அடக்கி நிறுத்தி விடலாமா, விடத்தான் முடியுமா? கனவு கண்ட மாதிரி நடந்து விட்டால் உலகத்துக்கே நற்காலம் வந்துவிட்டதாக வல்லவா ஆகும்? பெருமையடைவதுதான் நியாயம் என பிராமணுேத்தமர்கள் ஆறுதல் கூறினர். தாயின் உடல் கொஞ்சங்கொஞ்சமாக ஒடுங்கத்தொடங்கியதுதினம் ஆற்றுக்குச்சென்று நீராடி திரும்புவது சிரமம், ஒரு நாள் மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். இனிமேல் நீங்கள் ஆற்றுக்கு தூரம் போக வேண்டாம், அம்மா, ஆறு உங்களேத்தேடி வந்துவிடும் என்று சிரித்துக்கொண்டே சொன்னுன். ஒரு சில நாள் சங்கரனே அவள் புழங்கும் நீர் முழுவதையும் தன் கைப்படவே கொண்டுவந்து சேர்த்தான். சில நாட்களில் பூரண வாகினி ஆலவாய்ப்புழை நதியானது சிறுக சிறுக திசைமாறி கடைசியாக ஆரியாம்பிகையின் வீட்டை ஒட்டியே ஓடத்தொடங்கியது. இந்த அதிசயத்தை குறிப்

பிட்டு பேசாதார் இல்லை இப்படிப்பட்ட தெய்வ குழந்தையிடம் அந்நாட்டு அரசன் சத்தியவன்மன் புத்திரப்பேறு வேண்டும் எனப் பிரார்த்திக்க அவருக்கு புத்திரப்பேறு உண்டாகுக என்று ஆசீர்வதித்தனர். திடீரென சங்கரரிடம் காணப்படும் அமைதி, அளவுக்கு மீறிய மௌனம், நெடுநேரம் தொடரும் ஆழ்ந்த சிந்தனை இவை ஏதோ ஒரு பெரிய மாற்றம் ஏற்படக்கூடும் என்பதை யூகித்துகொண்டாள். தாய் உலகத்தை விட்டுபோக மாட்டேன் என்று தடை போட்டாலோ விதியின் வலிமையை யாரால்தான் மாற்றிட முடியும் உலகத்தோடு பற்றற்ற ஒருவனாக தன்னை மாற்றிக்கொண்டு துறவு பூண்டுகட்டற்று உலகத்தின் உய்வுக்காக உழைக்க வேண்டிய ஒரு கட்டத்தில் சங்கரன் இருந்தான். அம்மா, மகன் என்றுஎன்னிடம் சொந்தம் கொண்டாடுகிறாய், அடுத்த ஜென்மத்தில், போன ஜென்மத்திலும் நான் உன் மகனாக இருப்பேனா இருந்திருப்பேனா? நமக்கு நிரந்தரமாக ஏற்படக்கூடிய உறவு-தொடர்பு கடவுளுடையதாக மட்டுந்தானே இருக்கமுடியும். நாம் கடவுள் மீது வைக்கும் அன்பும் பாசமும் மட்டுந்தானே அழிவற்றதாக-நிரந்தரமானதாக இருக்க முடியும் என்ற நீண்ட உரையாடலை சிவகுருவின் மனைவியாகையால் புரிந்துகொண்டாள். என்றாலும் எல்லா தத்துவங்களையும் தூக்கியடிக்கும் சக்தி வாய்ந்ததாக தாய்மை உணர்ச்சி திகழ்கிறது. இப்பொழுதெல்லாம் ஸ்நானம் செய்ய அன்னையையும் உடன் அழைத்துச் செல்வது வழக்கம். தாயை ஆழமில்லாத முன் பகுதியில் விட்டுவிட்டு சங்கரர் நன்றாக அமிழ்ந்து மூழ்கி நீராடினார். திடீரென முதலை காலை பிடித்துக்கொண்டு அணு அணுவாக உயிரை வாங்கும் உண்மையைகூறிக் கூக்குரலிட்டார், அங்கு ஊரே திரண்ட கூட்டத்தில் ஒருவர் கூட முதலையிடமிருந்து காப்பாற்ற இறங்கவில்லை. அசரீரி வாக்கு 'இப்போதே சந்நியாசம் பெற்றுக் கொண்டால் இன்னும் எட்டு வருஷம் பிழைத்திருக்கலாம் என்றது. நான் சந்நியாசம் மேற்கொள்ள அனுமதியளிக்க முடியுமா அம்மா என கேட்டார்? சங்கரா! இந்த கணம் நீ உயிர் பிழைக்க கூடுமானால் என்னளவில் நான் என்ன செய்யக்கூடுமானாலும் என்ன சொல்லக் கூடுமானாலும் தயாராக இருக்கிறேன். நீ உயிரோடு இருக்கவேண்டியதுதான் முக்கியம். நீ என்ன வாழ்க்கை வாழ்கிறாய் என்பது குறித்து இனி கவலைப்படமாட்டேன். என்னிடம் ஏதோஅனுமதி கேட்டாய் அதை நான் கொடுத்து விட்டேன் என்றாள். சங்கரர் மாய உருவத்தின் பந்த பாசங்களை களைந்து விட்டதாக சங்கல்பம் செய்து கொண்டு, துறவற மந்திரத்தை ஜபித்து நதியில் மூழ்கினார். ஒட்டிக்கிடந்த இகலோக பந்தங்கள் எல்லாம் கரைந்து அகன்று விட்டன. மூழ்கி எழுந்த சங்கரர் பந்தபாச உறவு ஏதுமில்லாத ஒரு சந்நியாசி காலைப்பற்றிக்கொண்டிருந்த முதலை முன் சாபம் நீங்கிய கந்தர்வராகி மாயமாய் மறைந்து விட்டது. புனிதனாகத்துறவியாக கரைஏறி வந்தார் தாய், நம் வீட்டுக்கு போகலாமா; எனக்கேட்க; அம்மா சந்நியாசிக்கு இந்த பரந்த உலகந்தானே இனி என் வீடு என்றார். நான் என்னை-என் வாழ்க்கையை உயிர்ச்சார்பு, பொருட்சார்பு என்றும் இரண்டின் இச்சை விடுத்து மாற்றிக்கொண்ட காரணத்தினால் மனம் மறுபிறப்பை எய்தியதென இறைவன் முதலை வாயிலிருந்து மீட்டு உயிர்ப்பிச்சையளித்திருக்கிறான் என்று நினைவு படுத்தினான். துறவிகளுக்கு உலகத்திலிருக்கும் அவ்வளவு பெண்களும்

தாயார்தான் என்ருலும், பெற்று ஆசை அன்புடன் வளர்த்து ஆளாக்கிய எனக்கு என்று கொஞ்சமாவது சற்று அதிகச்சிறப்பு இருக்கக் கூடாதா, முடியாதா என்ற உணர்ச்சிமயமான தாயின் பேச்சு சங்கரரை உருக்கிவிட்டது 'என் அன்னை என்ற முறையில் உனக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை நான் புறக்கணிக்க மாட்டேன், உலகத்துக்கும் அன்பு செலுத்த கடமையாற்ற சேவை செய்ய அனுமதியளிக்க வேண்டும் என்ருன், 'என்னையே இறைவனுக்கு நிவேதனம் செய்யப்பட்ட பண்டமாக மக்களுக்கு அளிக்க வேண்டும். என்று குழந்தை நடக்க பழகிவிட்டதோ அப்பொழுதே அது தாயை விட்டு கொஞ்சங்கொஞ்சமாக விலகவும் கற்றுக்கொள்கிறது. உனக்குப்பிதுர்க்கடன் கள் செய்ய வேண்டிய கடமைப்பாடு இருக்கிறது. உத்தம சந்நியாசியின் முன்னேர் இருபத்தொரு தலைமுறைக்கு நற்கதி பெறுவார்கள், என்பது சாத்திரம், என்று ஆரியாம்பிகையின் பாதம் பணிந்து எழுந்தார். போகும் போது ஆறு திசைமாறி ஓடத்தொடங்கிய போது அதன் கரையிலிருந்த ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஆலயம் சிதில மடைந்தது. ஸ்ரீ கண்ணபிரான் சங்கரரை வேண்ட ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஆலயத்தை புதுப்பித்து விக்கிரத்தை ஸ்தாபித்து விட்டு தமக்கு கிரம சந்நியாசம் அருளத்தக்க சத்குருவைத்தேடிப்புறப்பட்டார்.

ஓதாது எல்லாம் உணர்ந்தாரேனும் பால சந்நியாசியான சங்கரர் தமது குருசம்பிரதாயம் விளங்கும் பொருட்டு மானசீகக் குருவைத்தேடிக்கொண்டு சற்றும் தளர்ச்சியடையாத தொடர்ந்து நடைபோட உடனே தொடங்கி விட்டார். காடுகள் மலைகள், நதிகள், நகரங்கள் என எத்தனை விதமான மக்கள், எத்தனை வகையான மொழிகள், பழக்க வழக்கங்களை சந்தித்து அனுபவித்தார் சுட்டெரிக்கும் வெப்பம், கடுமையான மழை, உடலை வதைக்கும் குளிர், போன்ற இயற்கையின் ஆவேசங்களால் தடுக்க முடியவில்லை அட்டமாசித்திகள் இயல்பாகவே கைவரப்பெற்றவரேயாயினும் உடல் வருத்தமும் உலகின் நிலையையும், நேரில் அறியும் பொருட்டே இவ்வளவு கஷ்டங்களையும் பொறுத்தாரென்றே கொள்ள வேண்டும். இது சந்நியாசிகள் இப்படி யாத்திரைசெய்து பார்க்கவேண்டும் என்பது கருத்து பிறகு, இரு கரையையும் தழுவியவாறு பெருக்கெடுத்தோடும் நர்மதை வெள்ளத்தைக் கடப்பது சாத்தியம் என்று தோன்றவில்லை. தம்மையறியாமலே ஒரு இன்ப பரவச உணர்வு சற்று அமரவேண்டும் என்று தோன்றியது. குளிர்மரங்கள் அடர்ந்த ஒரு சூழ்நிலையில் நர்மதா நதிக்கரையை ஒட்டி குகை ஒன்று கண்டார், மனத்திலே பக்தி உணர்ச்சி அலைமோதுவதை சங்கரர் உணர்ந்தார். வந்து சேரவேண்டிய இடத்திற்கு வந்தாயிற்று என்றமன நிறைவோடு அந்தக் குகையை மூன்று முறை வலம் வந்து பின் குகை வாசலில் நின்று சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து சங்கரர் எழுந்து நின்ருர். குருகோவிந்த பகவத் பாதர் தன் இரு கால்களை மட்டும் குகையிலிருந்து வெளியே தெரியும்படி நீட்டினுர். சங்கரர் அந்த குருவின் இருபாதங்களையும் தொட்டு அபிஷேகம் செய்து மலர்களால் அர்ச்சித்து மனப்பூர்வமாக சேவை செய்தார். அதே சமயம் குகையின் உட்புறமிருந்து கம்பீரமான குரல் 'மகனே வருக வருக உன்னைத்தான் எதிர்பாத்துக்கொண்டுக் காத்துக்கொண்டிருக்கிறேன் என எதிரொலி செய்தது. ஞானப்பிழம்பாக, தெய்வீக தேஜசுடன் கம்பீரமாக

தவசிரேஷ்டர் கோவிந்த பகவத்பாதர் குகையின் வாசலிலே நின்றிருந்தார். இவர் வியாகரணயோக சாத்திரத்துக்கு மகாபஷ்யம் அமைத்த பதஞ்சலி மகரிஷியின் மறுபிறவி என்று கருதப்பட்டார். ஆதிசேஷானவதாரமென கூறப்பட்டார், பகவான் கோவிந்தரின் கனவில் தோன்றி ஜெகத்திற்கே குருவாக இருந்து காத்து ரட்சிக்கும் பாலயோகி நர்மதை ஆற்றங்கரைக்கு வந்து சேருவார். அவருக்கு முறைப்படி சந்நியாசம் கொடுத்து அந்தயோகி-யின் சேவை தொடர உதவவேண்டும்என ஆக்ஞாபித்தார். சங்கரரை எதிர் பார்த்து மகரிஷி காத்துக்கிடந்தார். உலக நடைமுறை வழக்கத்திற்கு மாருக சங்கரருக்கு கிரமப்படி சந்நியாச தீட்சை அளித்து சந்நியாச தருமத்தில் அவரைப் பரிபூரணன் ஆக்கினுர். அத்வைத தத்துவத்தை ஒரு குருவின் மூலம் உபதேசம் பெற்றதன் மூலம் உலகத்தில் குருவுக்கு இருக்கவேண்டிய உயர்ந்த மரியாதையை சங்கரர் நிலை படுத்தினுர். எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் வேறு என்ன தகுதிகளைப்பெற்றவராக இருந்தாலும் ஒரு தத்துவத்தை சிந்தையில் ஏற்றுக்கொள்வதாகக் கொள்ளும்போது உப-தேசத்தை தக்க குருவிடமிருந்துதான் பெறவேண்டும். அவ்வாறு பெறும் போது அவர்கள் சிஷ்ய பாவத்தில் அடக்கமாக இருந்துதான் பெறவேண்டும் குரு இருளை அகற்றுபவர் ஆம். சங்கரர் ஆசாரியரை நமஸ்கரித்துத் துதிக்க நீ யார்' என்று வினவினுர். அதற்கு சங்கரர் 'யான் பூமியல்லன், ஜலம் அல்லன், அக்கினி அல்லன், அவை பிறழ்ச்சியுடையனவாயிருப்பதால் இவை யொழிந்த விடத்தில், மீதியாயிருப்பவனும் சுழுத்தியில் முக்கியமாகச் சிந்தித் திருப்பவனும், கேவலமும், ஏகமுமான சிவன் நான் என்றனன். மனே வாக்குக்குக்கெட்டாத வஸ்துவின் தத்துவத்தை வெளிப்படுத்தி சிஷ்யராஞர்

அணுவிலும் சக்தி ஊடுபாவாக நிறைந்திருக்கிறது, உணர முடிகிறது. இந்த மாய சக்தி-பரம்பொருள் தனியாக இருந்து கொண்டு உலகத்திலுள்ள பொருள்களை உயிர்களை ஆட்டுவிக்கின்றதா? அப்படியில்லை, அந்தப்பரம் பொருளே உலகமாக தோன்றுகிறது. உலகத்தின் பொருட்களாக உயிர்களாக வேறு அம்சங்களாக காணப்படுகின்றது. என்பதுதான் உண்மை ! பிரம்மம் ஒன்றுதான் மெய்ப்பொருள். பிரம்மம் வேறு மற்றவை வேறு அல்லவே அல்ல என்ற ஆழ்ந்த உணர்வுதான் அத்வைத தத்துவத்தின் அடிப்படை அந்த பிரம்மத்தின் அம்சத்தை நமது உடலில் எவ்வாறு கண்டு பிடிப்பது? பிரம்மம் அழிவற்றது. உடல் அழிந்து விடக்கூடியது, மனம்கூட சிலசமயம் செயலற்று விடுகிறது. ஆழ்ந்த உறக்கத்தில் உணர்வுகளும் ஒடுங்கிவிடுகின்றன உறங்கும்போது சுகமும் நிம்மதியும் அனுபவித்ததாக உறங்கி எழுந்து பிறகு கூறுகிறேமே, அவ்வாறு சுகமனுபவிப்பதற்கு மட்டும் ஆதாரமாக நாமறியா மலே விழித்திருந்த சக்தி ஆற்றல் எது? அதைத்தான் 'ஆத்மா' என்று குறிப்-பிடுகிருர்கள். எந்தவித வெளித்தொடர்பும் இல்லாத நிலையில் உடலின் உள் உறுப்புகள் தானுக இயங்குகின்றன. இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் நோய்க்கிருமிகளை எதிர்த்துத்தாக்கி அழிக்க முற்படுகின்றன, இப்படிச்செயல் படச்செய்யும் சக்தி எது? விஞ்ஞான ரீதியாக மகான்கள் கண்டறிந்த ஆத்மா என்று அதற்குப் பெயர் கொடுத்திருக்கிருர்கள். ஆத்மா உடலில் எல்லாமாக இருக்கிறது எல்லாமே செய்கிறது.

உலகம் உண்மையல்ல என்பது ஆசாரியார் திருவாக்கு. அவர் பொய் என்று கூறவில்லை. அதாவது நாம் என்ன நோக்கத்தில் உலகத்தைப் பார்க்கிறோமோ அது உண்மையல்ல என்பதே அடிப்படையாகும். மேடையிலே நாடகம் நடக்கிறது. நாம் ரசிக்கின்றோம், சிரிக்கிறோம். அழுகிறோம், திகைக்கிறோம், பீதியடைகிறோம், மிரளுகிறோம். நாடகம் வாழ்க்கை அல்லவே, பொய்த்தோற்றந்தானே! நாம் ரசித்தவை கற்பனை காட்சிகளே தவிர உண்மையல்ல என்று உணர்கிறோம் நாடகத்தில் இராமனாக நடித்த ஒருவர் சீதையாக நடித்த நடிகையை தன்னுடன் வந்து குடும்பம் நடத்த வேண்டும் என்று அழைத்தால் அவனை மனநோய் மருத்துவ மனையிலோ போலீசிடமோ ஒப்படைப்போம் அல்லவா? ஒரு நாடகம் போன்ற உண்மையல்லாத விஷயந்தான் உலகமும் உலகத்து வாழ்க்கையும் ஒரு நோக்கத்துக்காகத்தான் நாடக-மே முழு வாழ்க்கையாகிவிடாது. உலகவாழ்வு ஒரு நோக்கத்திற்கான தற்காலிகநாடகந்தானே தவிர அதுவே முற்றிலுமான உண்மை நிலையல்ல-

தம்மிலே நாமாக இரண்டறக்கலந்து கிடக்கும் ஆத்மாவின் உண்மைத் தன்மையை தெளிவாக விளங்கிக்கொண்டு அழிந்துபோகும் உடலை, திரும்பத் திரும்ப ஜென்மமெடுத்து உழலும் பேதமையை மாற்றி பிரம்மமாகவே நாம் ஆகிவரும் ஒருநிலையை எட்டி பிடிப்பதற்காக ஒரு மார்க்கம் அல்லது இந்த நிலையை அடைய மேலேறிச்செல்லும் படிக்கட்டுகள்தான் இகலோக வாழ்க்கை. படிக்கட்டுகள் வழியாக மேலேறுபவன் நடுவழியில் படிக்கட்டிலேயே அமர்ந்து கொண்டு மாடிக்கே வந்துவிட்டதாக எண்ணி விட்டால் வெறும் இகலோக வாழ்வே சதம் என்று உழன்று கிடப்பதாகும் மனிதன் படிப்படியாக மேலேறிஞானமுக்தி என்ற இறுதி நிலையை அடை-வதற்கு சில நடைமுறை நியதிகளை கூறியிருக்கின்றனர். அதாவது கர்மம், பக்தி, ஞானம் என்ற சாதனங்களே அவைகள். பயனைச்சற்றும் எதிர்பார்க்-காது, பயனைக்கருதாது, கர்மம் செய்து கொண்டிருப்பவன் ஒரு தவயோகிக்கு சமானமானவனாகி விடுகிறான். சங்கரர் கர்ம வழியை சற்று அழுத்தமாகவே வற்புறுத்திக்கூறுகிறார். தன்னலமற்ற கர்மத்தால் மனமானது பரிசுத்தமும் விசாலமும் பெறுகிறது. ஒருமுகபடுத்தப்படா விட்டால் தூய்மையானது மீண்டும் மாசுபட்டுவிடக்கூடும். அதனால்தான் கர்மத்துக்கு அடுத்தபடியாக பக்திமார்க்கம் பேசப்படுகிறது. பக்தி மார்க்கமும் ஞான முக்திக்கு மனிதனை மேலேற்றிவிடும் சாதனமாக திகழ்கிறது என்பது ஆச்சாரியார் அருள் வாக்கு சாமானிய மக்களுக்கு மனத்தை ஒருமுகப்படுத்தும் தொடக்க முயற்சியாக தெய்வ உருவங்களை மனத்தால் வழிபடுவதை சங்கரர் குறையாக கருதவில்லை. உருவம் குணம் போன்ற ஏதுமற்ற நிலையில் பிரம்மத்தை வழிபடு வதுதான் மன ஒருமைபாட்டுக்கான இறுதிநிலை, கர்ம மார்க்கத்தால் மனத் தூய்மை பெற்று, பக்தி மார்க்கத்தால் மனத்தை ஒருமுகபடுத்தி, மனத்தை வலிமை பெற்றதாக ஆக்கிக்கொண்ட ஒருவன் ஞான மார்க்கத்தை கடைப் பிடிக்கும் தகுதியை தானாகவே அடைந்து விடுகிறான். உயர்ந்த நிலையாம் ஞானமார்க்கத்தைத் தொட்டு பிடிக்க சில சாதனங்களைக் கடைபிடிக்க வேண்டும். ஆத்மாவைத்தவிர பிற பொருட்கள் அனைத்துமேஅழியக்கூடியவை

என்று உள்ளபடி உணரும் மனப்பக்குவத்தை முதலாவதாக பெறவேண்டும் அடுத்ததாக இம்மையிலும் மறுமையிலும் சுகபோக வாழ்வைச் சற்றும் இச்சிக்காத மனப்பக்குவம் பெறவேண்டும் மூன்ருவது ஆறுவிதமான அரிய பண்புகளை 1) மனத்தைக் கட்டுப்படுத்தி வசப்படுத்தி வைத்திருத்தல் 2) ஐம்புலன்களை அவை இழுத்த இழுப்புக்குச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்துவது, 3) அவ்வாறு தடுத்து நிறுத்தி புலன்களை முழு அளவில் ஆன்மீக நெறியில் வழி நடத்திச்செல்லுதல், 4) சுக துக்கம், தட்பவெப்பம் போன்றவற்றை ஒரே உணர்வோடு அனுபவிக்கும் பக்குவநிலை, 5) அடக்கிவைக்கப்பட்ட மனத்தை விரும்பும்போது, ஒருமுகப்படுத்திச் செயற்படுத்தும் ஆற்றலைப் பெறுவது 6) வேத சாஸ்திரங்களிலும் வேதாந்த போதனைகளிலும் ஆழ்ந்த நம்பிக்கையும், பற்றும் கொள்வது. ஆறு பண்புகளை தன்னுடைய இயல்பாகவே ஆக்கிக்கொள்ளவேண்டும். நான்காவது கடைசி சாதனை ஞானமுக்தி பெறுவதற்கான தீவிரமான நாட்டமும் அந்த வழியில் தீவிரமாக செயற்படுவதாகும்! இந்த நான்கு சாதனைகளையும் முடித்தவன் உயிர் வாழும் நிலையிலேயே ஜீவன்முக்தன் முக்தியடைந்தவனுகிருன். வாழ்க்கைக்காக எதைச்செய்தாலும் ஒட்டாத ஒரு போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும். புறக்கணிக்கும் பண்பு) நான்கு வேதங்களின் பிரமான வாக்குகள்

ரிக் வேதம் — ப்ரக்ஞானம் பிரஹ்மம்
யஜுர் வேதம் — அகம் பிரஹ்மாஸ்மி
சாம வேதம் — தத்துவம் அஸி
அதர்வண வேதம் — பிரஹ்மமே மாம்
அயமாத்மா பிரஹ்மம்

அத்வைத தத்துவத்தை கோவிந்த பகவத்பாதர் தமது உபதேசிக வாயிலாக சங்கரரிடம் ஒப்படைத்து விட்டார். அந்த அரும்பெரும் ஆன்மீகச் செல்வம் மக்களிடம் முறையாக வினியோகிக்கப்படுவதற்கான ஒரு வழி முறையை ஏற்படுத்திவிட்ட திருப்தி ஏற்பட்டது. தெய்வீக சத்திய தத்துவம் ஒன்றைப்பெறுவதற்காக சங்கரன் அடைந்த பூரிப்பை விட, தக்க ஒருவரிடம் அந்த தெய்வீக செல்வத்தை ஒப்படைக்கும் பேறு கிட்டியதே என்று கோவிந்தர் பேரானந்தம் கொண்டார். இவ்விதமாக சதா வேதங்களிலும், உபநிஷத்துக்களினுலும், பிரஹ்மதநித்திதேத்திலுலும், பகவத்கீதை முதலான சாஸ்திரங்களினுலும் மனே வாக்குக்கெட்டாத எந்த வஸ்துவின் தத்துவம் சொல்லப்பட்டிருக்கிறதோ அதே தத்துவத்தை நிர்வான சத்தத்தில் அடக்கிக் கூறியிருக்கிருர். சங்கரா நீ உலக சிஷ்டாசாரத்தை நிலைநிறுத்தச் சீடனுக வந்திருக்கிருய் என்று கூறி முறைப்படி சிரம சந்நியாசம் கொடுத்தருளினுர். ஒருநாள் பெருகிவரும் நர்மதையாற்று வெள்ளத்தை தன் கமண்டலத்தில் அடக்கி அங்குள்ள எவ்வுயிருக்கும் துன்பம் நேராவண்ணம் காத்தருளினுர் குழந்தாய், நாம் பிரியவேண்டிய கட்டம் வந்துவிட்டது, உன்னுடைய முதற் பணி, கடமை உடனடியாக புண்ணியகாசி மாநகரத்துக்குச்சென்று அத்வைத தத்துவத்தை தக்கவர்களுக்கு போதிக்கும் முயற்சியில் ஈடுபடு. வியாச பகவானின் பிரம்ம சூத்திரத்தின் தாத்பரியமும் அத்வைத தத்துவத்தைத்தான் அடியேற்றி நிற்கிறது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில் தெளிவுரை ஒன்றை எழுதுக; உலகத்திற்கு செய்யவேண்டிய சீர்திருத்தங்களைச்செய்து

வெற்றியடைவாயாக, எனக் கட்டளையிட்டு வாழ்த்தியருளினர். பிறகு கோவிந்தர் பதரிகாசிரமத்தை நோக்கி பயணமானர்.

சங்கரர் காசிச் க்ஷேத்திரமடைந்து. மணிகர்ணிகா கட்டத்தில் முக்தி மண்டபத்தில் தங்கி ஷண்மதங்களின் உண்மைகளை யாவருக்கும் போதித்து. அத்வைத தத்துவ உபதேசத்தில் ஈடுபடலானர். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்று தம்மை நாடிவந்த பட்டாச்சாரியரின் சாஸ்திர சந்தேகங்களை நீக்கி சன்மார்க்கங்களை போதித்து. சந்நியாச ஆசிரமத்தை நிலை பெறுவித்து அத்துவித முடிவை யாவருக்கும் உபதேசித்து ஆயிரக்கணக்கான சீடர்களுடன் வசித்திருந்தனர். மக்கள் ' சங்கராச்சாரியஈர் 'என்ற பெருமையுடன் பெருமிதத்துடன் அழைத்தனர் 'பகவத் பாதர்' என்றும் அடைமொழி இட்டு அழைத்தனர். தருக்கர்-மீமாம்சாகர், சாங்கியர், முதலியோர் கல்விச்செருக்கு ஒழிந்து வந்தது.இவ்வாறு சைவம், வைணவம், காணபத்யம், கௌமாரம் சாந்தேக்யம் சௌரம் முதலிய ஷண்மதங்களின் உண்மைகளை யாவருக்கும் போதித்திருக்கையில் தென்னாட்டில் காவேரிகரையில் ஸ்ரீரங்கத்தில் பிறந்த ஸனந்தனர் என்ற மகாபுருஷர் லக்ஷணமும், கைகளில் சங்கு சக்கர ரேகைகளும் கூடிய சிறிய பிரமச்சாரி வந்து விதிப்படி அவருக்கு சந்நியாசம் ஆசிரமம் கொடுத்தார் ஸனந்தனர், சற்குருவே! பாவக்கடலில் மூழ்கிப் பயனற்ற அடியேனைக்-கருணையோடு பாவக்கடலிலிருந்து கரையேற்றி யருள்புரிதல் வேண்டும் என்று பிராத்தித்தனர். இவர் ஆற்றலுடைய முக்கிய சிஷ்யராகி ஸனந்தனாசாரிய, ராயினர்.

கால பைரவர் அஷ்டகம், சிவநாமவளி போன்ற துதிப்பாடல்கள் சங்கரரிடமிருந்து பிறக்கின்றன. ஒருநாள், வழக்கப்படிநீராடி பவித்திரமான தோற்றத்துடன் சீடர்கள் புடைசூழ திரும்பி வருகிறபோது எதிரே ஒரு புலையன்-சண்டாளன்-அழுக்கடைர்து நாற்றமெடுத்த மேனி, கிழிந்து தாறு-மாறுகத் தொங்கிக்கொண்டிருந்த உடை, தலையிலே ஒரு மண்குடம், அதிலே நிரம்பியிருக்கும் பழைய கள்ளின் புளித்த நாற்றம், கையிலே சொறிபிடித்த அசிங்கமான நான்கு நாய்களை வேறு கயிற்றால் பிணைத்துக்கொண்டு சிஷ்யர்-களுடன் வரும் சங்கரரை ஊடுருவி அப்பால் செல்பவன் போல அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். ஒரு கணம் தாமதித்தால் தம்மீதே இடித்துக்கொண்டு அவன் செல்வான் போலிருந்ததால் தம்மிடம் எழுந்த உணர்வுடன் 'விலகிச்செல்' 'விலகிச்செல்' என்று கூறினர். புலையன் ஒதுங்காமல் நின்றான், ஆசாரியார்மீது பார்வையை ஆழமாக பதித்தான். இடிஇடி என ஆராவாரத்துடன் சிரித்தான். துறவிகளுக்கரசே! என்னை விலகி போகச் சொல்கிறீர்கள்! எது? எதிலிருந்து விலகிப்போக வேண்டும். அன்னமய கோசமாகிய தேகம் சடமாகலின் அது போகாது பஞ்சகோச விலக்ஷணமான ஆத்மாவோவெனின் அது சித்து அந்தச்சித்து பரிபூரணமாய் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது. அவ்வித ஆத்மாவிற்கு போதல் வருதல் முதலிய தொழில்கள் செய்ய இடம் இல்லை ஆதலால் எதைப்போகச்சொன்னாய்? சூரியனுடைய ஒளி கங்கை நீரிலும், சேரி சாக்கடை குட்டையிலும் ஒன்றாகவே விழுகின்றன

கங்கையாகட்டும், சாக்கடையாகட்டும், பொன் குடமாகட்டும், மண் குடமாகட்டும் உங்களுடைய பிராமண உடம்பாகட்டும் என்னுடைய புலையன் உடம்பாகட்டும்இவற்றின் வெளித்தோற்றம் வெவ்வேறு விதமாக மாறுபட்டு தோன்றினுலும் உள்ளடக்கம், உள்ளொளி ஒன்ருகத்தானே இருக்க முடியும் நம்மிரண்டு உடம்பும் விலகிச்சென்று விடுவதனுலேயே நாமிருவரும் தூரதூரமாகச் சென்றுவிட்டதாகக்கொள்ளமுடியும்! தெளிந்த மஹாத்மாவான உமக்கு யொதாரு கற்பனையுமில்லாதிருக்க புலயனென்றும் பிராஹ்மனனென்றும் பேதபுத்தி ஏன் வந்தது எனக்கேட்டு கலகலவெனச் சிரித்தான். எப்போதுமே ஞானவான்கள் தங்களுக்கு ஏற்படுகிற தோல்வியைக் கண்டு அதிர்ச்சியடையமாட்டார்கள், ஆவேசப்படமாட்டார்கள். தோல்வி என்பது புதிய ஞானத்தைப் பெறுவதற்கான ஒரு நல்வாய்ப்பு என்பதை அவர்கள் அறிவார்கள்..

கண்மூடித்திறப்பதற்குள் தமது சீடர்களுக்கு ஓர் அற்புதத்தையே நடத்திக்காண்பித்துவிட்டார், அந்தக்கணமே சங்கராச்சாரியார் அந்தப்புலயனைத் தமது குருவாக வரித்து, கரம் கூப்பியவாறு, வலம் வந்து, சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்து பணிந்து எழுந்தார். அந்த வினடியில் மனத்திலே விகர்சித்த பரவச உணர்வு காரணமாக முகிழ்த்ததுதான் 'மநீஷா பஞ்சகம்' இதன் சாரம் (1) விழிப்பு நிலையிலும், கனவின் போதும், உறக்க சமத்திலும் எந்த ஞானமானது தூங்காமணி விளக்காகத் துளங்கிப் பிரகாசிக்கிறதோ, எந்த ஒன்று பிரம்மன் முதலாக அனுவளவு சிற்றெறும்பு ஈராக உடலகங்களின் உயிரோட்டமாக - ஊடுபாவாக, ஆதார சுருதியாகத் திகழ்கின்றதோ, அது இகலோக வாழ்வில் பிடிப்போ பற்ருே இல்லாமல் காட்சி அளவாக எல்லாவற்றையும் பார்வையிட்டுக்கொண்டிருக்கிறதோ அந்த ஞானவடிவமே நான் (2) பிரம்மம் என்பது நானேதவிர வேறில்லை. உலகம் என்பது உண்மை அல்லாத ஒரு தோற்றந்தான். மாயை காரணமாக இந்த உலகப்பொய்த் தோற்றம் குறித்து கற்பனைச் சிந்தனைகளில் உழன்று கொண்டிருக்கிறேன். இவ்வாறு யார் ஒருவன் நிலைத்த அறிவு கொண்டு அழிவற்ற பரமானந்த நிலையில் உள்ளானே அவன் புலையனுயினும், சாண்டாளனுயினும், வேறு எந்த விதத்தில்கீழ்பட்டவனுகக் கருதப்பட்டாலும் அவன்தான் தன்னுடைய குரு ஆவான். இது என்னுடைய திடமான கொள்கை. (3) பிரபஞ்சமானது அளவுக்கு உட்பட்ட உண்மை யல்லாதாத ஒன்று என்பதை ஒருமுகமாக உணர்ந்து எவன் சாந்த இயல்பினைத் தன்னதாகக்கொண்டிருக்கிருனே எவன் தன் எல்லாவித வினைகளையும் ஞானத்தீயிலிட்டு பஸ்பம் செய்து விட்டு, தன் உடலைத் துச்சமாகக் கருதி ஆத்மாவுக்கே உயரிடம் அளிக்கிருனே அவன் எப்படிப்பட்டவனுக இருப்பினும் அவனை என் குருவாக ஏற்றுக்கொள்வேன். (4) மேகம் சூரியனுல் உண்டாகிறது. அது சூரியனை மறைப்பதோடு அந்த சூரிய ஒலியிலிருந்தே தானும் ஒளியை பெறுகிறது. இதே போன்று உலகம் எதிலிருந்து தோன்றி எதனை மறைத்து, எதனிடமிருந்து ஒளியைப் பெறுகின்றதோ அந்த ஆத்மானுபூதியோடு பேரானந்தத்தில் திளைக்கும் யோகி எவனே அவனையே என் குருநாதனுக வரிக்கிறேன். (5) எந்த ஒருவன் பிரம்மத்தை அறிபவனுக இருப்பது மட்டுமின்றி பிரம்மமாகவே ஆகின்றுனே அவன் எப்படிப்பட்டவனுயினும் தேவர்களாலும் வணங்கத்தக்க மகான்

ஆகிறான் என்பது அசைக்க முடியாத என் நம்பிக்கை.] மேற்படி மனீஷா பஞ்சகத்தின் கருத்து 'சிறந்தோய் ! ஜாக்கிர சொப்பனங்களில் மிக வெளிப்படையாக எந்த சாட்சி (ஞானம்) விரிகின்றதோ எது பிரம்மா முதல் எறும்பீறுகவுள்ள சராசரங்களில் பிரவேசித்திருப்பதான ஜகத்சாக்ஷியோ அதுவே யான், திருசியவஸ்து நானல்லன் என்னுந் திடப்பிரக்ஞை ஒருவனுக்கு இருக்குமாயின், அவன் சண்டாளனுகை இருந்த போதிலும் அல்லது பிராமணனுகை இருந்த போதிலும் அவன் எனக்கு குருவாவான் என்பது என் மனோ நிச்சயம், என்பதாகும். இந்தப்படி சங்காா் கூறிய மறுகணம் அங்கே புலையனும் மறைந்து, அந்த இடத்தில் இப்போது ஜோதிமயமான தோற்றத்துடன் பகவான் விஸ்வநாதர் ரிஷபவாகனத்தின் மீது சந்திரனைத் தரித்த முக்கண்ணராய், கள்குடம் கங்கையாகவும், நாய்கள் நான்கு வேதமூர்த்திகளாயும் துதித்தும் நின்றன. சங்கரர் மெய்மறந்த நிலையில் 'பரமேஸ்வரா ! நான் தேகத்தை நோக்குங்கால் தங்கள் திருவடிக்கு அடியவனுயிருக்கிறேன், என் ஜீவனை நோக்கிலோ தங்களது கூறுயிருக்கின்றேன், முக்கண்ணா! பரிபூரணா! பரிசுத்தாத்மாவாகிய சாக்ஷியை நோக்கிலோ யான் தங்களது சொருபமாகவேயிருக்கின்றேன் என எல்லா சாஸ்திரங்களாலும் என்புத்தி திடத்தன்மையை அடைந்திருக்கிறது என்றும் எம்பெருமானே, மெய்ப்பொருளே என் ஆணவ அகந்தையை அகற்றி புதுப்பாடம் கற்றுத்தந்த ஞான வள்ளலே.... என பலவாறுக ஈசனைத் துதி செய்தார் பரமன் சங்கரருக்கு நல்லாசி வழங்கி சிரசில் கை வைத்துநாமே நீயாகயிருக்கிறுய், உண்மையை வெளிப்படுத்தி வாதிப்பவர்தனை உடன்படுத்தி யாவர்க்கும் உணர்த்தி ஞானமார்க்கத்தினை விளங்கச்செய்து எம்மையடை வீராக' என்று வாழ்த்தியருளி மறைந்தார். விசுவலிங்க மூர்த்தியிலிருந்து சிவம் சத்தியம், சத்தியம் அத்துவிதம் என்னும் வாக்கியம் அனைவரும் கேட்க வெளிப்பட்டன. சங்கரர் சீடர்களுடன் பத்ரிகாச்ரமம் சென்று நர நாராயணரைத் தரிசித்து அருள்பெற்று வரும்போது அநேக மதவாதிகளை வென்று சீர்திருத்தினுர்.

சங்கரர் 12-ம் வயதில் விஷ்ணு சகஸ்ரநாமம், பிரம்மசூத்திரம் பத்து உபநிஷதங்கள், பஞ்சசுக்தோபநிஷதங்கள், நரசிங்கதாபினி, பகவத்கீதை கௌஷீதசி பிராம்மணம், ஸ்ரீருத்திராத்தியாயம், ஸநத்ஸுஜாதீயம் முதலிய அத்வித சித்தாந்தமாகிய பாஷியங்களை (விளக்க உரைகளை) எழுதி ஆத்ம போதம் தத்துவபேதம் அபரோக்ஷானுபூதி அத்துவித ஸஹஸ்ரி, சிவானந்த லகரி சௌந்தர்யலகரி, தட்சிணாமூர்த்தி தோத்திரம், விவேக சூடாமணி, சாதன பஞ்சகம் பஞ்சீகரணம் முதலிய சுமார் 124 சாஸ்திரங்களுக்கும் அதிகமாக இயற்றி உபதேசித்தார். ஆத்மா கடைத்தேற வியாகரண சூத்திரங்களை நெட்டுருப்போடுவது உதவாது, ஆகையால் கோவிந்தனை பஜனை செய் என்னும் ஸ்ரீ கோவிந்தத்துவாதஸ மஞ்சரிகா ஸ்தோத்திரம் என்னும் உலகத்திலுள்ள மோகத்தை களையவல்ல சிறு சாஸ்திரத்தை கூறினுர் ஸனந்தரிடம் பொறுமையாயிருந்த தன் சிஷ்யர்களிடத்தில் உள்ள மனமாசுகளை சீர்திருத்த அவர்கள் முன்னிலையில் கங்கையின் மறுகரையிலிருந்த ஸனந்தரின் குருபக்தியின் பிரபாவத்தை விளக்க தம்மிடம் வருமாறு சைகையின் மூலம் அழைத்தார். உடனே சற்றும் தயங்காமல் ஸனந்தர் தன் ஆசாரியருடைய திருவடியைத்

தியானித்துக்கொண்டு கங்கையிலிறங்கி நடக்க ஆரம்பித்தார். கங்காதேவி அவரின் ஒவ்வொரு அடியின் கீழே ஒவ்வொரு தாமரைப் புஷ்பங்களைத் தோன்றும்படி செய்து தாங்கினர்; அதுமுதல் அம்முக்கிய சீடர் பத்மபாதர் என்னும் பெயரிட்டு விளங்கி குருபக்தியின் பெருமை மிகவும் பெரிதே என்பதை நிலைநாட்டினர்.

சங்கரருக்கு வயது 16 ஆயிற்று. அவருக்கு சீடராகி, தங்கள் அஞ்ஞானமான இருளை அகற்றிக்கொள்ள ஆர்வத்துடன் எண்ணற்ற இளைஞர்கள் நாடி வந்த வாறு இருந்தனர். ஒருநாள் மிகவும் வயது தளர்ந்த ஒருவர் பிரம்ம சூத்திரத்தின் பொருளைப்பற்றி கருத்துப்பரிசோதனைசெய்துகொள்ள விரும்பி-னர். ஐயம்தானே அறிவின் அடிப்படை அறிவில் ஞானத்தில் உயர்வுதாழ்வு ஏது?யாருடைய ஐயத்தை யார் அகற்றுகிறர் என்பது பெரிதல்ல பொதுவாக ஐயம் அகலவேண்டும் முதியவரின் வினுக்கள் மிகவும் சிக்கலாகவும், நுணுக்க மிக்கவையாகவும் இருந்தன. ஆனல் சங்கரர் அளப்பறிய அறிவாற்றலால் வினுக்களை மிகவும் சாதாரணமாக சந்தித்து அற்புதமாக விடையளித்தார். ஒரு மாபெரும் வாதப்போர் நாட்கணக்கில் வளர்ந்து கொண்டு சென்றது. சங்கரரால் தீர்க்கப்படாத ஐயமே ஏதும் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது சுவாமி உங்கள் சோதனையில் அணுவளவாவது. நான் தேறுவேன் என்ற திருப்தி தங்களுக்கு ஏற்பட்டிருந்தால் அருள்கூர்ந்து தங்கள் உண்மை வடிவத் துடன் காட்சிதந்து என்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்று பணிவுடன் வேண்டிக்கொண்டார். அம்முதியவர் வியாஸ முனிவராக நின்று முழுத்-திருப்தியுடன் ஆசி வழங்கினர். பிரம்ம சூத்திரத்திற்கு எந்தெந்த கோணத்-தில் எதிர்ப்புகள் தோன்றக்கூடும் என்பதை யூகித்து அந்த ஆட்சேபங்களுக்கு சமாதானங்களையும் சூத்திரங்களிலேயே பொதித்து வைத்திருக்கிறேன். அவற்றை தெளிவாக உணர்ந்து கொள்வதுதான் முக்கியம் உன் உரை முழுத் திருப்தியை அளிக்கிறது. என்பதை உலகத்திற்கு உணர்த்தவே வாதப்போர் நடத்தினேன் என்றர். சங்கரர் தன் கடமை தீர்ந்தது, தங்கள் முன்னிலையி-லேயே சரீரத்தை விட்டுவிட கிருபை செய்ய வேண்டும் என, அதற்கு வியாஸ பகவான் 'நான் இன்னும் பதினறு வருடங்கள் கொடுத்தேன். இதுவுமன்றி வியாக்கியான சிம்மாசனதீசுவரன், ஷட்தரிசன ஸ்தாபனசாரியன், பூமண் டலாசாரியன் என்ற விருதுகள் வழங்கக்கடவது. பிரம்மசூத்திரத்திற்குஉரை எழுதிவிட்டு அதை மூலையிலே போட்டுவிடுவதானல் யாருக்கு என்ன பயன் அதன் உண்மையான கருத்து மக்களிடம் போய்ச்சேரும் என்பதற்கு எந்த உறுதிமொழியும் இல்லை. இதை மக்களிடையே பிரச்சாரம் செய்து பரப்பும் ஆற்றல் உன்னைத்தவிர வேறு யாரிடம் அமைந்திருக்கிறது என்றர். அதனல் அத்வைத தத்துவத்துக்கு புறம்பான பிற மதங்களை வாதங்கள் மூலம் வெற்றி கண்டு அவற்றை மக்களிடமிருந்து விலகச் செய்யவும் சங்கரர் திருவுளம் கொண்டார்.

மீமாம்சக மதத்தின் தூண்களில் ஒருவர் எனக்கருதப்பட்ட குமாரிப்-பட்டர், பட்டபாதாசாரியர் கருமகாண்டத்தை நிலைநாட்டி புகழ்பெற்றவர் இவர் மிக உயரத்திலிருந்து கீழே விழும்போது வேதங்கள் உண்மையாக இருக்குமானல் என் உயிருக்கு ஒரு தீங்கும் நேரிடக்கூடாது என நினைத்ததி-

ஞல் கை கால்கள் முறியாமல் ஒரு கண்ணில் அடிபட்டு பார்வைக்குறைவு ஏற்பட்டது. வேதங்கள் என் உயிரைக் காப்பாற்றட்டும் என வேதங்களின் மீது முழுநம்பிக்கை வைக்காமல், வேதங்கள் இருப்பது உண்மையானுல் எனக் கூறி வேதங்கள் மீது சிறு அவநம்பிக்கையைக் குறிக்கும்படி கூறியதனுல் கண்களில் ஒன்று பாதிக்கப்பட்டது பௌத்தர்களை கர்மமார்க்க வாதத்தினுல் வென்றுலும் தான் பொய் சொல்லி நம்பிக்கைத்துரோகம் செய்து அவர்கள் கொள்கைகளை கற்றது மன்னிக்கமுடியாத ஒன்று என வரவர மனம் நிம்மதியை இழந்தது. அதற்காக கடினமான முறையில் கழுவாய் தேடிக்கொள்ள துஷாகினிப் பிரவேசம் - தீமூட்டப்பட்ட உமிப் படுக்கையில் தானுகவே படுத்து கொஞ்சங்கொஞ்சமாக எரிக்க உயிரைப்பிரித்து உடலை வேகவைத்துக் கொண்டார். அது சமயம் அங்கு, பிரயாகைக்கு பிரச்சாரம் செய்தவாறு வந்த சங்கரர், மனிதாபிமானத்திலுைம், மேலும் அவரை அத்வைத மார்க்கத்துக்கு வாதத்தால் இழுத்து வந்து விட்டால் அத்வைத மார்க்கம் துரிதமாக வளருவதற்கும் பயன்படக்கூடியதாக அமையும் என்பதற்காகவும் துஷாக்கினிப் பிரவேசம் செய்தவரைக் காப்பாற்றி மீட்க விரைந்தார், என்னுடைய மார்க்கத்தைப்பற்றி உங்களுடன் விவாதித்து கருத்து பரிமாற்றம் செய்துகொள்ளவேண்டும். என்ற ஆவலுடன் வந்தேன் இந்நிலையில் தங்களுடன் வாதிடுவது எங்ஙனம் என்ருர்? பட்டர் உமித்தீயில் உடலைச்சிறுகச்சிறுக கருக்கிக்கொண்டிருந்த வேதனையை யோக பலத்தால் பொறுத்துக்கொண்டு சங்கருடன் வாதிட தயாரானுர். சங்கரர் மீமாம்சகர்கள் வேதங்களின் உண்மைப்பொருளின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்க்கிருர்கள், அது முழுமை பெருத அறைகுறைப்பிண்டமாகவே காட்சி தருகிறது என்பதை அசைக்கமுடியாத ஆதாரங்களுடன் உணர்த்தி அத்வைத மதத்தின் அடிப்படைக் குறிக்கோளான ஞானமார்க்கம் இணைந்தாலொழிய மீமாம்சகர்களின் குறிக்கோள் பயனற்றுப் போய் விடும். என்பதை நிருபிக்க அவ்வாதங்களினுல் கவரப்பெற்று மனமாற்றமடைந்து சங்கரரையே தமது குருவாக ஏற்று அத்வைத மார்க்கத்தை தழுவினுர் சுவாமீ! இனி நான் நெடுநேரம் உயிரோடு இருக்கமாட்டேன் மேற்கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபடுவது சாத்தியம் என்று தோன்றவில்லை. மாஹிஷ்மதி என்ற நகரத்தில் மண்டனமிச்ர பண்டிதர் என்றவர் எனது சீடர் என்னைவிட மீமாம்சத்தில் தீவிரமான கருத்துகொண்டவர், நல்ல ஆற்றல்மிக்க கர்மகாண்டி தாங்கள் அருள்கூர்ந்து அவரைச்சந்தித்து வாதில் வெற்றிபெறவேண்டும். அவர் அத்வைத மார்க்கத்தை ஏற்றுக்கொண்டால் மீமாம்சகர்கள் அனைவருமே அவரைப்பின்பற்றி விடுவார்கள்: அவருடைய முயற்சியில் நன்கு தழைத்து வளர்ந்து சிறக்க இயலும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்ருர். பட்டர்தம் சரீரத்தை பரித்தியாகம் பண்ணிவிட்டார்: அப்போது யாவரும் காண அந்த அக்கினியினின்றும் பேரொளியொன்று மேலெழும்பிச் சென்றுவிட்டது:

அக்காலத்திலிருந்த தண்டி, பாணமுராரி, பட்டபாஸ்கர கண்டனகார உதயனுசாரியார் முதலான வித்வான்கள் யாவரையும் வாதஞ்செய்து வென்று, பூர்வ மீமாம்சை மதத்தை எங்கும் பரவச்செய்து விளங்கிக்கொண்டிருந்த மண்டனமிசிரரைக்காண பத்மபாதர் முதலிய சிஷ்யர்கள் கூட்டத்துடன் நர்மதைநதி பக்கத்திலுள்ள மாகிஷ்மதி நகரத்தையடைந்தார்.

அங்குள்ள அரண்மனை போன்ற மாளிகையில் விசாலமான மண்டபத்தில் கிளிகளும் 'வேதம் சுதந்திரப் பிரமாணமா? அல்லது பரதந்திரப்பிரமாமா? எனப்பேசிக்கொண்டிருக்க, மண்டன மிசிரர் வியாசபகவானையும் ஜைமினி முனிவரையும் தமது வலிமையால் வருவித்துக்கொண்டு முறையே விசுவதேவ ஸ்தானத்திலும் பிதிர் ஸ்தானத்திலும் வைத்து சிரார்த்தம் செய்துகொண்டிருக்க அவர்கள் வழக்கப்படி துறவிகள் உட்புகுவதைத் தவிர்க்க வெளிக்கதவு தாளிடப்பட்டிருந்தது. சங்கரர் தமது யோக வலிமையினல் மூடப்பட்டிருந்த கதவைத்தாண்டி மேல் மாடிக்கு சென்ருர். இந்த சந்நியாசி வந்தவுடன் விஸ்ணு ஸ்தானத்தில் தருப்பையில் நின்றனர், அப்போது பிராமணபோஜனம் தொடங்கப்பட்டிருந்தது சந்நியாசிகளை வெறுக்கும் மண்டனமிசிரருக்குப்பெரும் கொதிப்பு உண்டாகியது இடக்காக எங்கிருந்து மொட்டை எனக்கேட்க சங்கரர் கழுத்திலிருந்து மொட்டை என வேறு படக்கூறினர்: ஒரு குட்டிவாதப்போரே தொடங்கி விட்டது: அதிதிகளான சன்னியாசிகளை கிரகத்தார் வெறுக்கலாகாது என்றும் அத்துடன் சிரார்த்த சமயத்தில் அதில் முக்சியபங்கு வகிப்பவர் கோபதாப உணர்வுகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது, என்றும் ஓர் இலை போட்டு விஷ்ணு ஸ்தானத்தில் உணவு படையுங்கள் போஜனம் முடிந்த பிறகு மற்ற விஷயங்களைப்பற்றி பேசித்தீர்ப்போம். சிரார்த்த நேரத்தில் தாங்கள் கோபாவேசப்பட்டார்ல்சிரார்த்தத்தின் பலனே வீணுகிவிடகூடும் எனவியாசர் ஜைமினி ஆசியோர் கூற சங்கரரை போஜனம் செய்ய அழைத்தார் பண்டிதரே நான் சிரமப்பட்டு இங்கே வந்தது கேவலம் வயிற்றுப்பிச்சைக்கு அன்று வாதப்பிச்சையே எனக்கு முக்கியம். உம்முடன் வாதப்போர் நடத்துவது-தான் எனது நோக்கம், குமாரிலிம்பட்டர்தான் அனுப்பி வைத்தார் எனக்-கூறி வாதப்பிச்சை இடுமாறு கூறினர். மிச்ரர்ஒரு ஞானச்சுரங்கம் பேரறிஞர் சிறந்த கல்விமான் அறிவுப்பசிக்கு விருந்து வந்திருக்கிறதென்றதை உணர்ந்து மிகுந்த பூரிப்புடன் விருப்பமுடன் இசைந்தார். சங்கரரும் இலைமுன் அமர குறைவின்றி பிதுர்காரியங்கள் போஜனத்துடன் பூர்த்தியடைந்தன:

விவாதத்திற்கு ஒரு நடுவர் இருப்பது நல்லது எனக்கூறி இந்த ஊரில் பண்டிதர் யாரையாவது தெரியுமா என, தெரியாது தெரியவேண்டிய அவசியமும் இல்லை, தாங்கள் யாரை நடுவராக தேர்ந்தெடுக்கிறீர்களோ அவரையே நான் ஏற்றுக்கொள்கிறேன் என தன்னம்பிக்கையுடன் கம்பீரமாக கூறினர். தங்கள் துணைவியார், சரஸவாணி, உபயபாரதிதேவியார், நடுவராக இருப்பது நல்லது என்று தங்களுக்குத் தோன்றினல் எனக்கு ஒரு சிறிதும் ஆட்சேபனை இல்லை என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். சரஸ்வதிதேவியின் அவதாரமான அம்மை கணவரும் ஒருவாதியாக இருக்கும் நிலையில் ஒருதலை பட்சமான தீர்ப்பு எனசொல்லிவிட எண்ணிவிடக்கூடிய தர்மசங்கடமான நிலையில் தயக்கம் ஏற்பட்டாலும் பொறுப்பை ஏற்க மறுப்பது இருவரையும் அவமரியாதை செய்வதாக அமையும் என்று ஒப்புக்கொண்டார். இரண்டு மல்லிகை மலர் மாலையைத்-தயார் செய்து இருவரிடமும் அளித்து யாருடைய மாலை முதலில் வாடுகிற-தோ அவர்களே தோற்றவராகக் கருதப்படுவார் என்றும் அறிவித்தார்

இந்த ஏற்பாடு பகுத்தறிவுக்கு ஒத்ததில்லை என எண்ணுவது சரியல்ல தொடர்ந்து வெற்றிபெற்று வருபவருடைய மனநிலை எப்போதுமே சமநிலையிழக்காமல் ஒரே நிலையில் இருக்கும் ஆனல் தாங்கள் வாதம் தோல்வியடைந்துவிட்டதாகக் கூறுவோரின் மனம் சமநிலை இழக்கத் தொடங்கிவிடும், உள்ளத்தில் முற்றிலும் சிறுகச்சிறுக கொந்தளிப்பு முற்றிலும் மேலோடும், மனநிலையில் இப்படி ஒரு குழப்பம் உருவாகும் போது உடலின் உஷ்ணநிலை இயல்பினை விட்டு அதிகரிக்கும் தோல்வியடைந்து வருவோர் உடல் சூடு மிகும் காரணத்தால் மாலை வாடத்தொடங்கும். விவாதத்தைத் தொடங்கும் போதுவெற்றிதோல்வி தொடர்பான நிபந்தனையும் வகுத்துக்கொண்டார்கள் மண்டனமிசிரர் தோல்வியுற்றல் அத்வைத மார்க்கத்தை ஏற்று துறவியாகிவிட வேண்டும். சங்கரர் தோற்றால் மீமாம்சக மதத்தைத் தழுவுவதோடு இல்லற தர்மத்தையும் மேற்கொள்ளவேண்டும். நிபந்தனையை இருவரும் ஒப்புக்கொண்டனர். மண்டனரும் சங்கரரும் மிகவும் காரசாரமாக, நுணுக்கமான சிக்கலான பல புதிர்களை இருவரும் எழுப்பி சிக்கலை அகற்றுமாறு பரஸ்பரம் கோரினர். விவாதம் மிகவும் உயர்ந்த கண்ணோட்டத்தில் அற்புதமான தத்துவ ஆத்மீகத்தன்மை வாய்ந்ததாக இருந்தது. வேதத்திலுள்ள கர்ம காண்டத்தையே முக்கிய மார்க்கமாக கொண்டுள்ள ஜைமினி முனிவராலியற்றப்பட்ட, பூர்வ மீமாம்சை மதமே மண்டன மிசிரரின் கொள்கையாம். இவர் கருத்து வேதத்திற் சொன்னபடி நித்தியநைமித்திகாதி கர்மங்களையும், அக்கினி ஹோத்திராதி சிரௌத்த ஸ்மார்த்த கர்மானுஷ்டானங்களையும் அவசியம் யாவரும் செய்துவர வேண்டும். நாம் செய்த கர்மத்திற்கு அந்தந்த கர்மமே பலனைத்தரும். நல்ல கர்மாவை பண்ணினல் சுவர்க்கம் முதலிய நல்ல பலனும், கெட்ட கர்மாவை பண்ணினல் நரகம் முதலிய கெட்ட பலனும் உண்டாகின்றன. இவ்வுலகம் எப்போதும் இப்படியே இருக்கிறது. சந்நியாசிகள் கர்மார்க்களை விட்டபடியால் கர்ம பிரஷ்டர்களாவார்கள், இவை முதலானவையாம். வேதத்திலுள்ள ஞானகாண்டத்தையே முக்கிய மார்க்கமாகக் கொண்டுள்ள, வியாச முனிவரால் இயற்றப்பட்ட, உத்ரமீமாம்சா மதமே சங்கர பகவத்பாதாசாரியரின் கொள்கையாம் இவர் கருத்து வேதத்தின் கர்மகாண்டமாகிய பூர்வ மீமாம்சையிற் சொன்னபடி நித்திய நைமித்திகாதி சகல கர்மாக்களும் பரமேஸ்வரப் பிரீதியாகச் செய்யவேண்டும். இப்படிச்செய்வதினல் அந்தக்கரண (மன) சுத்தியுண்டாவதே அதற்கு பலமாம். அந்தக்கரணசுத்தியுண்டான பின்னர், வேதத்தின் ஞானகாண்டத்தில் கூறிய பிரஹ்மாக்ம ஐக்கிய முணர்த்தும் பிரஹ்ம ஞானத்தை அனுஷ்டிக்க வேண்டும். இந்த பிரஹ்ம ஞானத்தால் ஜனன மரணமாகிய சர்வதுக்க நிவர்த்தியுண்டாகிப் பரமானந்த பிராப்தி வடிவ மோக்ஷமுண்டாகும் என்பதாம். தாம் செய்த கர்மத்திற்கு, கர்மாவே பலன் கொடுக்கமாட்டாது, பலன் கொடுக்க பரமேஸ்வரர் ஒருவர் உண்டு, அவரே பலன் கொடுப்பவர். வேதத்தின் கர்ம காண்டமெல்லாம், வேதத்தின் ஞான காண்டத்தில் போய் அன்வயிக்க வேண்டும் அப்போதுதான் அதற்குப் பிரயோஜனம் உண்டு. வேதத்தின் முடிவாகிய ஞானகாண்டக்கருத்து யாதெனில் பிரஹ்மம் ஒன்றே சத்தியம், ஜகத்ஜீவ பரம் மித்தை என்பதாம். ஜீவர்களின் மனத்தின் கண் மலம் விக்ஷேபம் ஆவரணம் என்னும் மூன்று குற்றங்கருள்ளன இவற்றுள் மலம் என்பது பாவம் இதனை யொழிப்பதற்கு கர்மத்தை

போதிக்கின்ற வேதம் கர்மகாண்டமெனப்படும் விக்ஷேபம் என்பது-சஞ்சலம் இதனை யொழிப்பதற்கு உபாஸனையை போதிக்கின்ற வேதம் உபாஸனு காண்ட மெனப்படும். ஆவரணமென்பது மறைப்பு இதனை யொழிப்பதற்கு ஞானத்தைப் போதிக்கின்ற வேதம் ஞான காண்டமெனப்படும். கர்ம காண்டமும் உபாஸனுகாண்டமும் சாதனமென்றும், ஞான காண்டம் சாத்தியமென்றுங் கூறப்படுகின்றன. கர்மோபாசனைகளின் பயன்முறையே மனத் தூய்மையும், மனவொருமையுமாம். இவை ஞானத்திற்கு சாதனம். ஞானத்தின் பயன் ஆவரண நிவர்த்தியும் அகண்ட சிவமாய் நிற்றலுமாம் ஆதலின் கர்ம காண்டப்பொருளும், உபாசனுகாண்டப்பொருளும் முடிவானவையல்ல ஞானகாண்டப்பொருளோ பிரஹ்ம சூத்திரம், உபநிஷத்துக்கள், பகவத் கீதை முதலிய வேதாந்த சாஸ்திரங்களால் உணர்த்தப்படும் ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்தாலுண்டாகும் அகண்ட பிரஹ்ம சாக்ஷாத்காரத்தையடைவிப்பதால் இதுவே முடிவான பொருளாம். இவை முதலான ஞான காண்டக் கொள்கையுடையவர்கள் உத்ரமீமாஸகர்கள் இத்தகைய கொள்கைகளுடன் பலநாட்கள் சாஸ்திர வாதந்தொடர்ச்சியாய் நடந்தது; மண்டனமிசிரர் கழுத்திலிருந்த பூமாலை வாடிக்கருகி விட்டது. உடனே உபயபாரதிதேவி இரண்டு பேரையும் நமஸ்கரித்து இரண்டு பேரும் பிக்ஷைக்கு எழுந்தருள வேண்டும். எனச்சொன்னுர் அப்போது சபையிலுள்ள யாவரும் மண்டன மிசிரர் தோல்வியடைந்தார் என்றும், சங்கர பகவத் பாதாசாரியார் வெற்றியடைந்தனர் என்றும் உணர்ந்தார்கள். உடனே மண்டனமிசிரர் ஆசாரியரை நமஸ்கரித்து சந்நியாசசங் கொடுத்தருளல் வேண்டுமென்று பிராத்தித்தனர். அப்போது தாம் தோற்று சிறுமையடைந்துவிட்டதாக மனங்குமுறவில்லை, மாருக அத்வைத மார்க்கத்தின் பேருண்மை நிலையை காலங்கடந்தாவது விளங்கிக்கொள்ள முடிந்ததே என்பதில் பூரிப்பும் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைந்தார். முழுமன திருப்தியுடன் துறவறம் பூண தீர்மாணித்து விட்டார். அப்போது சரஸவாணி சங்கரரை வணங்கி ஒரு விண்ணப்பம் என கூறுவார்கள், இல்லறத்தில் கணவனும் மனைவியும் பிரிக்க முடியாதபடி இணைந்த ஓரம்சம், ஒருவரெனக் கருதப்படுகின்றமையால் என் கணவனை வெற்றி கொண்ட உண்மையை மறுக்க முடியாது, ஆனுல் அது பாதி வெற்றிதானே வாதப்போரில் அடியாளையும் தாங்கள் வென்ற பிறகு தான் முழுவெற்றி தங்களுக்குக் கிடைத்ததாக அர்த்தம் என விநயமாக வினவினுள். அவள் வாதம் நியாயம்தான் என்று சங்கரர் ஒப்புக்கொண்டார், வாதப்போரில் இறங்கினுர். உண்மையிலேயே மிகவும் நுணுக்கமான சிக்கலான பல வினுக்களை எழுப்பி சங்கரரை சற்று திகைக்கவே செய்தாள். என்ருலும் அனைத்துக்கும் விடையளித்து மடக்கி விட்டார் இவரை எவ்வகையிலாவது வென்று விடக்கருதி மன்மதன் கலைகள் எத்தனை? ஆண்களிடத்தும் பெண்களிடத்தும் அந்தக்கலைகள் எவ்வாறு என்பன முதலான காம சாஸ்திர சம்பந்தமான பல கேள்விகளைக்கேட்டாள் ஒரு மாத தவணை கொடுத்தால் பதில் கிட்டும் எனச் சங்கரர் கூற அவ்வாறே உபயபாரதியும் சம்மதித்ததின் பேரில் சங்கரர் தமது சீடர்களுடன் தொடர்ந்தனர், காட்டில் வேட்டையாட வந்த அந்தப்பக்கத்து அரசன் அமருகன் ஏதோ ஒருகாரணமாக உயிரிழந்து கிடந்தான் இதைக்கண்ட சங்கரர் மகாராஜனுடைய உடலில் 'பரகாயப்

பிரவேசம்' என்னும் யோக வித்தையின் பலத்தால் புகுந்து சிற்றின்ப சுகாதி களை நேரில் கண்டு வினவுக்கு விடையளித்து தோல்வியைத்தவிப்பதற்கு கருதி தம்முடைய தீர்மானத்தை சிஷ்யர்களுக்கு குறிப்பாக எடுத்துரைத்து, தாம் திரும்பி வரும்வரை தமது உடலத்தை பத்திரமாக பாதுகாத்து வைக்கும்படி கட்டளையிட்டார். இச்செயல் பத்மபாதருக்கு உடன்பாடில்லாததால் பிரம்மச்சர்யம் கெடும். பெண் இணக்கம் யாரையும் திரும்பவிடாது. ஸந்நியாசம் கெடும் என தடுத்தார். சங்கரர் நிஷ்காம்யமாக செய்வதால் குறைவுபடுவதில்லை, கிருஷ்ணர் பல கோபிகைகளுடன் நிஷ்காம்யமாக இருந்ததை குறிப்பிட்டு களங்கமின்றி வருவதாக கூறினர். பரகாயப்பிரவேசம் மூலமாய் அமருகனது உடலிலிருந்தவாறு சங்கரருடைய ஆத்மாராணிகளுடன் இல்லறமும் நல்லர சாட்சியும் நடத்தினர். அரசனிடம் புதிதாக தோன்றிய பாண்டித்தியத்தையும் வாக்குத்தோரனை, சாதுரியம் முதலான திவ்விய குணங்களையும், மிக்கவனப்பும் பொருந்தி நாடு இருப்பதையும் குறிப்பால் உணர்ந்து. யாரோ ஒரு மஹாத்மா பரகாயப் பிரவேசஞ் செய்திருக்கக்கூடு மென்று ஊகித்து, ராணிதன் அனுமானத்தை மந்திரிகளுக்கு தெரிவிக்க எங்கேனும் உயிர் நீங்கிய உடல் காணப்படின் அதை உடனே தகனஞ் செய்க என ஏவலர்களுக்கு கட்டளையிட்டனர், அரசனுடலிலிருந்த சங்கரர் 'அமருகம் என்னும் பெயருள்ள ஒரு காமநூலையும் இயற்றினர். உடல் செய்யும் தவறுகளுக்கும் உடலின் ஆசாபாசங்களுக்கும் ஆத்மாவுக்கும் தொடர்பில்லை, தெரு விளக்கின் வெளிச்சத்தை பயன்படுத்தி ஒருவன் அந்தப்பக்கம் வருவோரின் பண்டங்களை மறித்து சூரையாடுகிறுன், அந்த நிகழ்ச்சிக்கு விளக்கின் ஒளியைக் காரணமாக்கிக் குறைசொல்ல முடியாது அல்லவா. ஆத்மாவை தம்மிஷ்டப்படி ஆட்டிவைக்கும் சக்தி உடலுக்குக்கிடையாது. உடல் மூலம் பெறக்கூடிய சுகம் - வேதனை போன்றவற்றிற்கும் ஆத்மாவிற்கும் சம்பந்தமே இல்லை. அமருகன் உடல் பெற்ற இல்லற சுகத்தினுல் சங்கரர் எந்த விதத்திலும் தவறு செய்யவோ ஒழுக்கங்கெடவோ மாசுபடவோ இல்லை என்றே பொருள் வேண்டும் ஆசாரியார் கூறியதவனையில் வரமாட்டார் போல் தெரிகிறதுஎனக் கண்டு பத்மபாதர் முதலிய மாணுக்கர்கள் ஆசாரியருடைய சரீரத்தை குகையிலேயே மறைத்து வைத்து சிலரை பாதுகாத்திருக்கும்படி கூறிவிட்டு இசைப் புலவர் வேடத்தில் அமருக ராஜசபை வந்து 'ஓ இராஜனே் தாங்கள் சாதாரண அரசனல்ல. இதுவன்று இதுவன்று என்பது முதலிய வேத வாக்கியங்களால் உருவப்பொருள் அருவப்பொருளெல்லாவற்றையும் தன்றுக விலக்கி, தள்ளப் படாததும் அனைத்தையும் தள்ளுவதுமாகிய எப்பொருளை மஹான்கள் தாமாகவேயறிகின்றுர்களோ அந்த 'தத்துவமசி' என்லும் தத்துவப்பொருளாகவே தாங்கள் இருக்கிறீர்கள் என உணர்த்தினர். அவர் பூர்வ ஞாபகம் தோன்றப்பட்டு தம் சீடர்களை உணர்ந்து திருப்தியுடன் அனுப்பினர். பின்னர் ஆசாரியார் அமருக ராஜனுடைய தேகத்தை விட்டு முன்னர் விட்டிருந்த தமது உடலிற் பிரவேசித்தனர். இதன் நடுவே ஆசாரியரின் தேகத்தை ஏவலாளர்கள் எடுத்து தீ மூட்டியிருந்தமையால் அஃது எரிந்து கொண்டிருந்தது. சங்கரர் அக்கினியைத் தணித்தற் பொருட்டு நரசிம்ம மூர்த்தியை துதித்தனர். ஸ்ரீமன் நாராயணர், இலக்ஷ்மி நரசிம்மராக சங்கரர் முன் தோன்றி, கைகொடுத்து தீயிலிருந்து மேல் தூக்கிவிட்டனர். சங்கரர் வான் வழியாக மண்டனமிசிரர் இல்லமடைந்து விவாத சபையில் அமர்ந்து இருக்க

அமருகம் என்ற காம சாஸ்திர நூல். வானவழியாக அச்சபையில் வந்து விழுந்தது. அதன் மூலம் அம்மையார் எழுப்பிய வினாக்கள் அனைத்திற்குமே தயக்கமோ மயக்கமோ இல்லாமல் விடையளித்து விட்டார். அதைக்கண்டு சரித்திரமுணர்ந்து, பெருவியப்படைந்து, சங்கரருக்கு முழு வெற்றியைக் கூறினாள். கலைமகள் ஈசுவரனின் தங்கை, அவரே பிரம்மாவின் அம்சமான மண்டன மிசிரரின் மனைவியாக அவதரித்தார் என ஒரு கருத்து உண்டு. பிரம்மலோகத்திற்கு செல்ல விரும்பிய அவரை சிருங்ககிரி முதலிய இடங்களில் சாரதாதேவி என ஆராதிக்கப்பட்டு நல்லோர்களுக்குச் சாந்நித்தியாய் அருள்செய்து வருவீராக என சங்கரர் வேண்ட அவ்வண்ணமே யாகுக என அருளிச்சென்றனர் கடைசியாக ஆசாரியார் அவர்கள் காமகோடி பீடத்தை அமைத்த சமயம் அங்கே நிறுவிய மடத்துக்கு சாரதா மடம் என்றே பெயரிட்டார்.

மண்டனமிசரர் சங்கரரிடம் சந்நியாசம் பெற்றுக்கொண்டு, மஹா வாக்கிய உபதேசங் கேட்டு, சுரேசுவராசாரியார் என்னும் தீக்ஷாநாமம் பூண்டவராய், சங்கரரின் மாணாக்கர்களுக்குத் தலைவராயினர், பின் கர்மத்தை பின்னுக்குத்தள்ளி கர்மமற்ற நிலைக்கு வழியமைக்கும் 'நைஸ்கர்ம்ய சித்தி என்ற நூலைச் செய்து புகழ் பெற்றார். சங்கராச்சாரியார் ஆத்ம ஞானமே பரமபுருஷார்த்தமென்று வற்புறுத்தினாராயினும் மற்றவைகளை மறுத்து நீக்கிவிடவில்லை. ஆத்ம ஞானத்திற்கு அவைகளையும் சாதனமாகக்கொண்டனர் அதனால் இவருடைய சமரச சன்மார்க்க அத்துவிதக் கொள்கையை யாவரும் தழுவிச் சீடரானார்கள் சங்கரர் அவதரித்த காலத்தில் வேதத்தின் அடிப்படையில் இயங்கிய மதங்களும் வேதத்தை புறக்கணித்து 70-க்கு மேற்பட்டு இயங்கி வந்ததாகத் தெரிகிறது. ஒவ்வொரு மதமும் தனித்தனியாக ஒவ்வொரு பகுதி மக்களின் செல்வாக்குடன் இயங்கி வந்தன. தெளிவான நோக்கமும் குறிக்கோளும் இல்லாமல் இயங்கிவந்த அந்த அந்த சமயங்களை தனியொரு மனிதராகவே முயன்று போராடி மக்கள் மனத்திலிருந்து விலக்கி விட்டு. அத்வைத மார்க்கத்தை பக்கபலமாக பணக்காரர்களின்துணையையோ அரசாங்கத் தொடர்புகளையோ நாடிச்செல்லாமல் நிலைநாட்டினார். தம்முடைய சாதனைகளுக்காக அற்புதங்களையோ, வேறு வன்முறை நெறி வழிகளை கைக்கொள்ளவில்லை. ஒவ்வொரு மதத்தலைவர்களுடன் நேருக்கு நேராக வாதப்போர் நிகழ்த்தியே அவர்களை வென்று தமது கோட்பாட்டினை மனப்பூர்வமாக அவர்களை ஏற்றுக்கொள்ள வைத்தார், அதுவும் உயிர் வாழ்ந்த முப்பத்தி இரண்டே வயதிற்குள் என்பது திகைப்பூட்டும் அற்புத சாதனையாகும்.

சங்கரர், பத்மபாதர் சுரேசுவரர் முதலான மாணாக்கர்களோடு புறப்பட்டு தென்திசையில் மகாராஷ்டிரம் முதலான தேசங்கள் தோறும் ஞான நூலினை பரவச்செய்து ஸ்ரீ சைலம் சென்று ஸ்ரீ பிரமராம்பிகை மல்லிகார்ச்சுனேசுவரரைத் தரிசித்து, அங்கு சிகரகலாயந்திரம் பிரதிஷ்டை செய்து பரசுபத, சாந்தேய, வைஷ்ணவ முதலிய பல மத வாதியருக்கு அந்தந்த மத உண்மைகளை போதித்து வெற்றியடைந்திருந்தனர். அந்தப்பிரதேசத்திலுள்ள காபாலிகர்கள், கபாலம் எலும்பு மாலைகளை தரித்துக்கொண்டு, மது மாமிசங்களை

உக்கிர பைரவருக்குப் பூசை செய்து சாப்பிடுவது வழக்கம். இவர்களேயன்றி கராடி என்னும் பிராம்மணர்கள் காசிக்குப்போகும் யாத்திரீகர்களைப்பிடித்து ஒரு வருஷம் நன்ருக போஷித்து தசரா பண்டிகை முடிவில், துர்க்கைக்கு நரபலியிடுவார்கள். அவர்கள் சுடுகாட்டில் அமர்ந்து நரமாமிசமும் உண்பார்கள். இறைவன் எந்த நிலையிலும் உயிர்பலியை விரும்புவது இல்லை யென்றும் தாமாகவே ஊடுருவிக்கிடக்கும் உயிர்களைக் கொல்லுவதை இறைவன் ஒருபோதும் விரும்பமாட்டார் என்றும் பலவாருக எடுத்துக்கூறிய சங்கரர் காபாலிகர்களுக்கு மக்களும் எவ்வித ஆதரவும், மதிப்பும் தராமல் அவர்கள் மனந்திருந்தி நல்வழியைக் கடைபிடித்து திருந்துவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். கருணையுள்ளத்துடன் இறைவனை வழிபடவேண்டும். என அறிவுறுத்தினுர் தங்களுக்கு விரோதமாக பிரச்சாரம் செய்து தங்களை அழிப்பதற்கென்றே சங்கரர் வந்திருப்பதாகத் தவருகக்கருதிவிட்ட காபாலிகர்கள் சங்கரரை எப்படியாவது தீர்த்துக்கட்டி விடுவது என்று தீர்மானித்தனர். காபாலிகத் தலைவன் ஒருவன் சங்கரரை வஞ்சித்துக் கொல்ல வேண்டி, மாறுவேடத்துடன் சங்கரரிடம் வந்து வணங்கி சீடனைப் போல் சில நாட்கள் நடித்து, ஒருநாள் தனிமையிலிருக்கும்போது காபாலிகன் சங்கரரை பணிந்து நான் பைரவ பூஜை செய்பவன், ஒருநாள் பைரவர் எனக்குப்பிரசன்னமாகி உலகையாளும் அரசன் தலையையாகிலும், அல்லது எல்லாமுணர்ந்த பிரஹ்மஞானியின் தலையையாகிலும் பலியாகத்தந்தால் உன் விருப்பம் பலிக்கும் என்று கூறினுர். அரசன் தலை எனக்கு கிடைக்காது. அதனுல் தங்கள் தலையை எனக்குத்தந்தருள வேண்டும், அதனை கொடுப்பதனுல் தங்களுக்கு ஒருவித நஷ்டமுமில்லை என்று யாசித்தான். அது கேட்ட சங்கரர் கானல் நீரை யார் குடித்துச் சென்ருலென்ன? எனக்கு யாதொரு குறைவுமில்லை, உன் கருத்தின்படி செய்துகொள் என்று கூறி கண்மூடிச் சமாதி நிஷ்டையிலிருந்தார். காபாலிகன் கத்தியை எடுத்துக்கொண்டு கையை ஓங்கினுன். அதற்குள் அகஸ்மாத்தாக பத்மபாதாசாரியார் அங்கு வந்து பெருங்கோபத்தோடு ஊங்காரஞ் செய்து 'நரசிம்ம' என்று சிந்தித்தனர் உடனே பத்மபாதர்மேல் நரசிம்ம ஆவேச முண்டாய், உக்கிர நரசிம்மமூர்த்தி தோன்றி அந்த காபாலிகனைக் கிழித்தெறிந்தது. பின்னர் சங்கரர் நிஷ்டை கலைந்தெழுந்து நரசிம்ம மூர்த்தியைத் துதிக்க அம்மூர்த்தி சாந்தமடைந்தது. குருதேவா, நான் இவனைக்சொல்லவில்லை, கொல்ல நினைக்கவும் இல்லை. பரம்பொருளே இது என்ன காட்சி, என்ன கொடுமை என்று மட்டுந்தான் கூவினேன் என்ருர் பத்மபாதர். நரசிம்மம் தோன்றக் காரணம் பற்றி பத்மபாதர் முன்பு அகோபல பர்வதக்குகையில் தவஞ்செய்திருந்தபோது நரசிம்மமூர்த்தி பிரசன்னமாகி, நீ சிந்திக்கும்போது அனுக்கிரஹம் புரிகின்றேன் என்று கூறி மறைந்தனர் அதனுல் இப்போது தோன்றியருளினுர் என்று சங்கரருககுக் கூறினுர். இச்சரித்திரத்தை முப்போதும் பக்தியால் படிப்போருக்கும் கேட்போருக்கும் அவமிருத்தியுவொழிந்து மேன்மையுண்டாகுமென்பது திண்ணம் பிரயாகையில் ஓரிளைஞன் மரக்கிளையென்றில் தற்கொலை செய்துகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். அவனுக்கு கடுமையான தொழுநோய் பீடிக்கப்பட்டு, உடல் உறுப்புக்கள் அழுகிக் குறைந்து அருவருப்பு ஊட்டக்கூடிய நிலையில் இருந்தது. சங்கரர் அந்த இளைஞனை நெருங்கி அன்போடு பரிவோடு

அவன் உடலைத்தடவிக்கொடுத்தார். தொழுநோய் அகலப்பெற்று புதிய உடம்பை பெற்று புதிய மனிதனை உதங்கர் என்ற திருநாமத்தை பெற்று பிற்காலத்தில் சிறந்தான். ஸ்ரீ சைலத்திற்கு வருகை தந்திருந்த சங்கரரும் அவருடைய சீடர்களும் அடுத்து கர்நாடகத்தில் ஒரு வைணத்திருப்பதிக்கு வழிபடுவதற்காக கோயிலுக்குச்சென்றபோது கோயில் அதிகாரிகள் விபூதி ருத்திராட்சதாரியாகத் திகழ்ந்த சங்கரருக்கு வைணவத் திருக்கோயிலுக்குள் என்ன வேலை என விதண்டாவாதம் பேசி உள்ளே விட மறுத்துவிட்டனர். சங்கரர் கலகலவெனச் சிரித்து, விஷ்ணுவும், சிவனும் ஒருவருக்கொருவர் விரோதிகள் என்று உங்களுக்கு யார் சொன்னார்கள்? விஷ்ணு உள்ள இடத்தில் சிவன் இருக்கிறார், சிவன் உள்ள இடத்தில் விஷ்ணு இருக்கிறார் என்ற உண்மை உங்களுக்கு ஏனோ விளங்கவில்லை என்றார். இன்னும் கொஞ்ச நேரம் போனால் இந்தக்கோயில் கருவறையில் விஷ்ணுவின் மூர்த்தியுடன் சிவனுடைய மூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது, என்று சாதிப்பீர் போலிருக்கிறதே, என்று கேலிபேசினர். அதற்கு சாதிப்பது என்ன உண்மையே அதுதானே, என்றார் சங்கரர் சங்கரரை அவமானப்படுத்தி அனுப்பவேண்டும் என்று திட்டமிட்ட கோயில் அதிகாரிகள் உள்ளே வந்து பாரும், கண்ணாரக் கண்ட பிறகாவது உமது மதியீனத்தை உணர்ந்து கொள்ளும் எனக்கூறி, கோவிலுக்குள் அழைத்துச்சென்று கருவறை கதவை திறந்தனர். அங்கே லட்சுமி சமேதராகக் காட்சி தரும் மகா விஷ்ணு-வின் அருகே உமாதேவி சமேதராக சிவபெருமான் மூர்த்தி வடிவில் காட்சி தந்தார். கோயில் அதிகாரிகளும் பிறரும் சங்கரரின் தாளடி பணிந்தெழுந்து தங்கள் பிழை பொறுக்குமாறு வேண்டிக்கொண்டனர்.

இறைமையின் உண்மைத்தெளிவை உணரும் முயற்சியில் தம் சீடர்கள் தமது கூட்டாளிகள் என்றே சங்கரர் எப்போதும் கருதி வந்தார். தமது சீடர்-களில் யாராவது ஒருவர் சிறந்த கருத்தொன்றை எப்போதாவது தெரிவித்-தால் அதனை மிகுந்த கருத்து சிந்தனையுடன் செவிமடுத்து, ஏற்கத்தக்க கருத்தாக இருந்தால் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வார், அச்சீடரை அந்தச் சமயத்தில் தமது குருவாகவே பாவிப்பார்.

ஸ்ரீ சைலத்திலிருந்து, கோகர்ணம் ஹரிசங்கர க்ஷேத்திரங்களை துதித்து மூகாம்பிகை க்ஷேத்திரமடைந்தார். அங்கு கொல்லூர் என்னும் ஊரில், மரணமடைந்த வேதியச் சிறுவனின் பெற்றோரின் துயர்நோக்கி தயவுண்டாய் உயிர்ப்பித்து எழுப்பியருளினார், யாவரும் கண்டு களிப்பும் வியப்புமடைந்தனர் மூகாம்பிகையின் உண்மைதத்துவமான ஆத்ம ஞானத்தைப் போதித்திருந்-தனர். மூகாம்பிகையிலிருந்து ஸ்ரீபலிபுரம் அக்கிரஹாரத்தையடைந்து பிக்ஷை செய்து சிலநாள் தங்கி இருந்தனர். அவ்விடத்தில் பூர்வமீமாம்சை என்னும் கர்மகாண்டத்தை யனுஷ்டிக்கும். இரண்டு ஆயிரம் வேதியரும் அவர்களுக்குத் தலைவராக, பிரபாகரபட்டரும் சாஸ்திர வல்லவராக இருந்தனர். பிரபாகரபட்டருக்கு ஊமைக்குழந்தை உதித்திருந்தது. அக்குழந்தையை சங்கரரை வணங்கச்செய்தனர். இச் சிறுவன் ஊமையாக இருக்கிறான், உபநய மந்திரம் செய்வித்தேன், வேத

சாஸ்திரம் ஓதுவித்தால் ஓதமாட்டான், அடித்தால் கோபிக்கவும் செய்யான் விளையாடவும் மாட்டான் இறைவரே இச்சிறுவன் ஜடம் போலிருப்பது யாது காரணமோ அறியேன், தாங்கள் அருள்புரிய வேண்டுகிறேன் என்று வணங்கி விண்ணப்பித்தார். சங்கரர் அச்சிறுவனை தயவால் நோக்கி நீ யார்? ஏன் இவ்வாறு ஜடம் போலிருக்கின்றனை, என்று வினவினர், அதற்கு அச்சிறுவன் ஆசிரியரே! யான் ஜடன் அல்லன், மற்றோ ஜடங்களனைத்தும் எனது ஸந்நிதானத்தில் தொழிற்படுகின்றன, இதில் யான் சிறிதும் சந்தேகிக்க மாட்டேன் மற்றும் ஜனனம், மரணம், பசி தாகம், சுகம் துக்கம் முதலாகிய ஆறு அலைகளையும், பிறத்தல், இருத்தல், வளர்தல், மாறுதலடைதல், குறைவடைதல் நாசமடைதல் முதலிய ஆறு விகாரங்களையும்கடந்த ஆனந்தபிழம்பாகியபரமாத்ம சொரூபமே நானுயிருக்கிறேன், என்று மறுமொழி கூறினன். இவ்விதமாக தனது சச்சிதானந்த அத்துவித சொரூப சித்தியைக் குறிக்கத்தக்க அனுபவத்தினை 12 ஸ்லோகங்களாக கூறினர். ஊமையான ஜடப்பையனிடம், பிரஹ்ம தத்துவத்தை யுணர்ந்தும் ஸ்லோகங்களுண்டாவது யாவருக்கும் பெருவியப்புக்கிடமாயிற்று. சுவாமி, இந்த ஞானக்குழந்தைக்கு தந்தையாக இருக்கும் தகுதி எனக்கு இல்லை. என் குழந்தை என்ற பாசச்சிறையிலிருந்து விடுதலை செய்து விடுகிறேன். இவனைத் தாங்களே ஏற்றுக் கொள்ளுங்கள் இனி இவன் உலகத்தின் குழந்தையாக இருக்கட்டும் என்றார்- சிறுவனை சீடராகக் ஏற்றுக் கொண்டு, அவனிடம் ஒளிவிடும் ஆன்மீக ஞானம் சுதந்திரமாக வளர வழி வகுத்துக்கொடுத்தார். அஸ்தாமலகர், என்ற நாமதேயத்துடன் பின்னுளில் புகழ்பெற்ற அச்சிறுவன் அத்வைத மார்க்கத்துக்கு விளக்கம் தரும் பல நூல்களை வரைந்தான். குருபணிவிடை பக்தியில் மிக்க ஆர்வத்துடனிருந்த ஆனந்தகிரிக்கு வேத சாஸ்திரங்களாகிய பதினன்கு வித்தையும் வரும்படி மனத்தினுல் கருணையோடு கிருபை செய்தார். அவரும் தோடக சந்தத்தோத்திரமியற்றினர், சங்கரர் ஹஸ்தாமலகர் எழுதிய பல ஸ்லோகங்களுக்கு விளக்க உரை எழுதியிருக்கிறார் சாதாரணமாக குரு வரையும் நூல்களுக்குத் தான் சீடர்கள் விளக்க உரை எழுதுவது வழக்கம் அஸ்தாமலகரை வாயு தேவதையின் அவதாரமென்பர்.

துங்கபத்திரை நதி தீரத்தில் ஓர் அதிசயக் காட்சியைக் கண்டார். வெய்யில் பக்கமாக தவறி வந்து சேர்ந்த ஒரு கர்ப்பிணியான தவளையின் வருத்தத்தைக்கண்ட ஒரு நாகப்பாம்பு தனது படத்தை விரித்து தவளை மீது குடைபோல மறைத்துக்கொண்டு வெயில் படாமல் தவளையைக் காத்துக்கொண்டிருந்தது. அந்த அன்பு மயமான இடத்தின் பெயர் சிருங்ககிரி. அது காமம் குரோதம் ஆகிய தீய உணர்வுகள் தீண்டாத நிலையில் உயர்வாழ்வு வாழ்ந்த மகான் ரிஷ்ய சிருங்கர் வசித்த இடம் எனத்தெரிகிறது. முன்பு பந்தனம் செய்து வைத்திருந்த சரஸவாணியாகிய சாரதையின் சாந்நித்யத்தை அந்தத்திருத்தலத்தில்நிலைப்படுத்துகிறார் சங்கரர் சாரதாம்பிகையின்திரு உருவத்தைப் பிரதிஷ்டை செய்து சாரதா பீடம் என்றஞானப்பீடத்தையும் நிர்மாணிக்கிறார். திக் விஜயத்தை சிலகாலம் நிறுத்தி வைத்துவிட்டு சற்று அதிக காலம் அங்கேயே தங்கி சங்கரர்தேவியை ஆராதனை செய்துவருகிறார் கர்நாடக மன்னனை சுதன்வாவுக்கு சங்கரரிடம்பக்தியும் பற்றும் ஏற்பட்டது

சங்கரரின் ஞான மார்க்க முயற்சிகள் தங்கு தடையின்றி நடைபெறுவதற்காக தம்மால் இயன்ற பொருள் உதவிகளையெல்லாம் வலியச்சென்று உதவுகிறுன். தமக்காக சுகத்துக்காக சௌகரியத்துக்காக சிறு அணுவைக்கூட சங்கரர் ஏற்றுக்கொள்ளவில்லை சாரதாபீட ஸ்தாபனத்துக்காக மட்டுமே உதவியை பயன்படுத்தினுர். தனது மாணுக்கரின் கல்விச்செருக்கு தொலையும் பொருட்டு, குருபணிவிடை பக்தியில் மிக்க ஆர்வத்துடனிருந்த ஆனந்த கிரிக்கு வேத சாஸ்திரங்களாகிய பதினுன்கு வித்தையும் வரும்படி மனத்தினுல் கருணையோடு கிருபை செய்தார். உடனே ஆனந்தகிரிக்கு எல்லா வித்தைகளும் வந்துவிட்டன, அதனுல் ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரிய சுவாமிகள் அஷ்டகம் என்னும் தோடகசந்தத் தோத்திரம் இயற்றினுர். ஸ்ரீ சங்கராசாரியாரின் ஆணைப்படி சுரேசுவராசாரியர் நைஷ்கர்மியஸித்தியும் பத்மபாதாசாரியர் பிரஹ்ம சூத்திரத்திற்கு விரிவுரையான விஜயடிண்டிமம் என்பதையும், மற்ற மாணுக்கர்களும் அத்துவிதக் கொள்கையுடன் கூடிய ஞானசாஸ்திரங்களையும் இயற்றினர்.

வழக்கம்போல அன்று சங்கரர் தியானத்தில் அமர்ந்தபோது வழக்கத்துக்கு விரோதமாக அவர் மனம் சஞ்சலப்பட்டது, யோக நோக்கத்தினுல் தனது அன்னையாரின் முடிவுநாள் உணர்ந்து உடனே தன் அன்னையைக்காண-புறப்பட்டார் ஆரியாம்பிகைக்கு மிகுந்த ஆயாசமாக, கண்களில் பஞ்சை டைந்த மாதிரி நேரம் சமீபித்துவிட்டது. அன்னையின் முடிவுநாள் உணர்ந்து அவருக்கு நிற்குணப்பிரஹ்ம உபதேசம் அந்நிலையில் எட்டாமையால் சகுணோ பதேசம் உபதேசித்தார். சங்கரர் வந்து ஒரு சில வார்த்தைகள் பேசியதும் அன்னையின் உயிர்பிரிந்தது. சங்கரர் துறவியாகி விட்டபடியால் அன்னையின் இறுதிச்சடங்குகளை அவர் பொறுப்பேற்று செய்யமுடியாது என்று உறவினர் கருதினர். தகனக் கிரியைகளை நான்தான் செய்யப்போகிறேன், அன்புக் கடமையை நிறைவேற்றியே தீருவேன் என்று சங்கரர் பிடிவாதமாகக்கூறி விட்டார். உற்றுர் உறவினர்களுக்குக் கடுங்கோபம் அத்துடன் ஆரியாம்-பிகையின் குடும்பத்துக்கு இருந்த கனிசமான சொத்துக்களை அபகரிக்க இயலாமற் போய் விட்டதே என்ற ஆத்திரம் வேறு, அதனுல் சங்கரரை பகிஷ்கரித்து, தகனக்கிரியைகளில் பங்கு கொள்வதில்லை என்றுதீர்மானித்-தனர், ஒருவர்பின் ஒருவராக வெளியேறத்தொடங்கி, கொஞ்ச நேரத்தில் வீடு காலியாகிவிட்டது. ஊர் மறையோரும் தகனக் கிரியையில் ஒத்துழைக்க கூடாது எனத் தடுக்கப்பட்டனர். சற்றும் கவலைக்கொள்ளாமல் சங்கரர் மட்டுமே அங்கே இருந்தார். தாம் ஒருவராகவே வீட்டுத்தோட்டத்துப்பக்கம் சிதை அமைத்து, ஒருவராகவே அன்னையின் சடலத்தை தூக்கிச்சென்று சிதையில் கிடத்தி, தாமே அன்னையாரின் இடக்கையில் தீ உண்டாக்கிச்சென்று தனியாகவே தகனக்கிரியை முதலான தாய்க்கடனை முடித்தார், இத்தேசம் சந்நியாசிகள் வருவதற்குத் தகுதியற்றதாகுக என்று கூறி சிருங்கேரி சென்றுர்

சாரதா பீடத்தில் நாள் தவருமல் வழிபாடு நடக்கவேண்டும், தொடர்ந்து அத்வைத பிரசாரமும் நடக்கவேண்டும் என அந்த நோக்கம் நிறைவேறுவதற்கான ஒழுங்கான நடைமுறை ஏற்பாடுகளைச்செய்தார். வழிவழி தொடர்ந்து சேவை செய்வதற்கான ஒரு சிஷ்ய பரம்பரையை சங்கரர் தோற்றுவித்தார். தமக்குப்பிறகு பிற்காலத்தில் தகுதி குறைந்தவர்கள்

எல்லாம் சாரதாபீட ஆசாரியர்களாக வந்துவிடாமல் தடுப்பதற்கு எச்சரிக்கையாகவே கடுமையான விதிமுறைகளை ஆசாரியராக கடைபிடிக்கவேண்டும் என்று சங்கரர் ஏற்பாடு செய்தார். சாரதா பீடத்தின் முதலாவது ஆசாரியராக இருந்தவர் யார் என்ற விஷயமாக சில மாறுபட்ட தகவல்கள் கூறப்படுகிறது. முதல் ஆசாரியராக பிருத்வீதவா என்ற உத்தமர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆசாரிய பிருத்வீதவருக்கு மேற்பார்வையாளராக சுரேசுவராசாரியாரை நியமித்தார். அறிவிலும், ஆன்மீக ஞானத்திலும் பிரச்சாரத்தன்மையிலும் மற்றவர்களைவிட சிறந்தவரான சுரேசுவரரை முதலாவது ஆசாரியராக நியமிக்கவில்லை என்பதற்குக் கூறப்படும் காரணங்கள் சில. கடுமையான பிரமசரிய விரதத்தை தீவிரமாக அனுஷ்டித்த சாதனுவாதிகளே தொடர்ந்து ஆசாரியராக சாரதா பீடத்தை அலங்கரிக்க வேண்டும் என்பது சங்கரர் விருப்பம். சுரேசுவரர் இல்லறத்திலிருந்து துறவறத்தை மேற்கொண்டவர். சுரேசுவரர் அத்வைத மார்க்கத்தால் கவர்ந்து இழுக்கப்பட்டு அத்வைத மார்க்கத்தை கடைபிடித்தவர் அல்ல, சங்கரரிடம் தோற்றதன் காரணமாக அத்வைத மார்க்கத்தைத் தழுவியவர் சுரேஸ்வரருக்கு வித்யாகர்வமும் கோபமும் உண்டு, பத்மபாதரிடம் பொறுமை கொண்டு அவர் நூல்கள் பயனற்று அழிந்துபோக சாபமும் கொடுக்கிறார், அதனால் இவருடைய ஞானத்திற்கு தடையாகிறது சுரேசுவரர் தான் முதல் ஆசாரியராக நியமிக்கப்பட்டவர் எனக்கூறப்படுவதும் உண்டு. மற்றும் சங்கரரின் மனதிற்கு பலவகையிலும் உகந்த சீடராகத் திகழ்ந்த பத்மபாதரே முதல் ஆசாரியராக நியமிக்கப்பட்டார் என்று ஒரு தகவல் பத்மபாதர் முதல் முக்கிய சீடராக இருந்தும் வித்யா கர்வமும் இடையில் சுரேஸ்வராச்சாரியார் மேல்போட்டியும் தனியாத பொறுமையும்இருந்ததால் இடையில் சங்கரரை விட்டு விலகி தென்னாடு வந்து உறவினர்களால் கெடுக்கப்பட்டு பின் சங்கரரிடம் இணைந்தார். யார் முதல் தலைவராக இருந்தார்கள் என்பது இப்போது பிரச்சனையல்ல. அன்று தொடக்கம் முதல் இன்றுவரை சிருங்ககிரி சாரதாபீடம் ஆற்றிவந்துள்ள அருஞ்சாதனைகள் என்ன என்பது தான் முக்கியம் அந்த விசயத்தில் எந்த வகையிலும் குறைகூறமுடியாது, பெருமிதமடையவேண்டும்.

சங்கரர் மீண்டும் திக் விஜயத்தைத் தொடங்கி தமிழகத்திலுள்ள சிதம்பரம் நடராஜ மூர்த்தியை தரிசித்தார். அங்கு உள்ளதும்-இல்லாததும் எனக் கருதத்தக்க உருவமற்ற சின்னம் ஒன்றை அமைத்து வழிபடவேண்டும் என்று எண்ணி, தில்லையம்பலத்தில் அன்னகர்ஷ்ணயந்திரம் அமைத்தார் பின்னர் திரு இடை மருதூரை அடைந்து லிங்கவடிவில் காட்சியளிக்கும் மகாலிங்கத்தை துதிசெய்து வழிபட்டபோது லிங்கத்தின் உச்சிதிறந்து ஈசன் தன் கரம் உயர்த்தி 'சத்தியமானது அத்வைதமே எனக்குரல்' கொடுத்தாராம் சங்கரர் திருச்சிராப்பள்ளிக்கு விஜயம் செய்தபோது சொரூபியாக காட்சி தந்த திருவானைக்கா அகிலாண்டேசுவரிக்கு சிவசக்கர உருவாகவும் ஸ்ரீ சக்கர உருவாகவுமுள்ள இரு தாடகங்களில் ஆகர்ஷித்து ஈசுவரியின் செவிகளிலேயே அணிவித்தார். திருவரங்கம் ஸ்ரீ ரங்கநாத ஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் சென்றிருந்தபோது ஆசாரியர் ஜனாகர்ஷணயந்திரத்தை அங்கு ஸ்தாபித்தார் மதுரைக்குச் சென்றசமயம் மீனாட்சி பஞ்ச ரத்தினத்தை மதுரை மீனாட்சி

அம்மனுக்கு அர்ப்பணித்தார். திருவனந்தபுரத்திற்குச் சென்று பத்மநாப சுவாமியை வழிபட்டார். மதுமாமிஷங்களைச் சக்தி முதலிய தெய்வங்களுக்குப் பூசிக்கும் துராசாரங்களைக் கண்டித்து சத்துவ பூஜை செய்யும் திட்டப்படுத்தி ஜீவகாருண்யம், சத்தியம், சுத்தம் குருவினிடத்திலும் ஈசுவரனிடத்திலும் அபேதமான பக்தி, வைராக்கியம், பிரஹ்மஞானம் முதலியவைகளை முறையே சுருதி யுக்தி அநுபவ மூலமாக யாவருக்கும் புகட்டி, வாதிகளை உடன்படுத்தி, தமது மாணக்கர்களாக்கினர். இராமேசுவரம் இராமநாத சுவாமியைத்தரிசித்தார். அங்கு சாத்தேயர்களை சீர்திருத்தினர். பின்னர் அனந்தசயனம் பின்னும் அநேக க்ஷேத்திரங்களிற் சென்று அங்கங்குள்ள சைவம் (சிவமதம்) வைணவம் (விஷ்ணுமதம்) காணபத்யம் (கணேசமதம்) கௌமாரம் (சுப்ரமணியமதம்), சாத்தேயம் (சக்தி மதம்), சௌரம் (சூரியமதம்) முதலிய ஷண்மதங்களின் உண்மைகளைப்போதித்து இவ்வாறு மதங்களும் உபாசனைக்குரியனவாய் சாதனங்கள் எனக்கூறி யாவர்க்கும் நிர்குணப் பிரஹ்மமாகிய கடவுள் ஒருவரே என்றும் அத்துவித ஞானத்தை உண்டாக்கி மாணக்கர்களாக்கிக் கொண்டார். சிதம்பரத்தில் சிவகங்கையை உண்டாக்கினர். காஞ்சிமா நகருக்கு விஜயம் செய்த சங்கரர் எல்லைப்பகுதியிலுள்ள விசுவேசுவரர் ஆலயத்தில் தங்கினர், மன்னன் ராஜசேகரன் வரவேற்று உபசரித்தான். காமாட்சி ஆலயத்தை காஞ்சியில் நிர்மாணிக்க திருவுளம் கொண்ட சங்கரர் நகரத்தையே ஸ்ரீ சக்கரம் உருவில் மாற்றி செப்பனிடுமாறு மன்னனைக் கேட்டுக்கொண்டார், மன்னனும் சற்றும் மாறாத நிலையில் நிறைவேற்றி வைத்தான். தமது விருப்பப்படி புதியதாக செப்பனிடப்பட்ட பிறகே ஆசாரியர் காஞ்சிமா நகருக்குள் பிரவேசித்தார். உற்சவ காலங்களில் வரதராஜப் பெருமாளும், ஏகாம்பரேசுவரரும் காமாட்சி அம்மனை வலம் வரும்விதத்தில் காமாட்சி திருக்கோயில் அமைந்திருப்பது சிறப்பாகும். முதலில் காமாட்சி அன்னையின் தோற்றம் மிகவும் உக்கிர காலத்தில் அமைந்திருந்தது. சாமானிய மக்கள் சற்று அஞ்சினர். சங்கரர் ஆலயத்தில் பிரவேசித்து தமது கரங்களினாலேயே ஸ்ரீ சக்கரம் பொறித்து அம்மனின் ஆவேசமயமான ஞானக்கினியை அதில் அடங்கச்செய்து அன்னையின் உக்கிரத்தை தணியுமாறு செய்தார். காஞ்சீபுரத்தில் ஒரு சர்வக்ஞ பீடத்தையே நிறுவினர். ஜைன, புத்த மதத்தைச் சார்ந்த பலருடன் ஆன்மீகச் சமரிட்டு, அத்வைத மதத்தில் அடைக்கலமாக்கினர். எந்தநிலை மக்களையும் திருவருளுக்குப் பாத்திரமாகச் செய்யும் மற்றொரு பீடத்தையும் காஞ்சியிலே நிறுவினர் அதுதான் இன்று காம கோடிபீடம் என பெரும்புகழும் சிறப்பும் பெற்று தொண்டாற்றி வருகிறது. இதைத்தவிர சாரதாமடம் என்ற மற்றொன்றையும் நிறுவினர். தேசமெங்கும் உள்ள சீடர்கள் காஞ்சி வந்து சங்கரரை சந்தித்து அருளாசிபெற்றுச் செல்வதை வழக்கமாகக் கொண்டனர் காஞ்சிபுரத்தில் காமாக்ஷியம்மனுக்கு ஸ்ரீ சக்கர ஸ்தாபனம் செய்து காஞ்சி காமகோடி பீடத்தை ஸ்தாபித்தார் திருவொற்றியூரில் ஸ்ரீவட்டப்பநாச்சியார் உக்கிரகத்தை அங்குள்ள கிணற்றில் அடக்கி சாந்தப்படுத்தியருளினர். முக்தி தரும் ஏழு ஸ்தலங்களில் காஞ்சி ஒன்று பரம்பொருளின் மூன்று அம்சங்கள் எனக்கருதப்படும் ஏகாம்பரேசுவரரும் வரதராஜ பெருமாளும், காமாட்சி மகாதிரிபுர சுந்திரியும் குடிகொண்டுள்ள புண்ணிய க்ஷேத்திரம், பின்னர் திருப்பதி அடைந்து திருமலை ஏறி ஸ்ரீனிவாச பெருமானை ஆராதித்து பூரிப்படைந்தார். திருப்பதியில் தனகர்ஷணயந்திரத்தை ஸ்தாபித்தார். மீண்டும்

வடக்கு நோக்கிச் சென்று நர்மதை நதி தீரத்திலுள்ள திரியம்பகபுரத்திற்கும் சௌராஷ்டிரத்திலுள்ள சோமநாதபுரத்திற்கும் சென்று மகேசுவரனைப் போற்றித்துதி செய்தார். அதற்குமுன் கர்நாடகத்தில் பன்னிராயிரம் கபாலிகர்களின் தலைவனாக விளங்கிய கிருஷிகன், அவர்கள் வழக்கப்படி பல பலாத்காரங்களின் மூலம் பல கொடூரமான கொலை முதலியவற்றை செய்து வந்தனன். அவன் சங்கரரை பலாத்காரமாக கொலை செய்ய முற்பட்டபோது சங்கரர் ஹுங்காரஞ்செய்து கொன்றொழித்தார். பின் கோகர்ணத்தில் நீலகண்டாசாரியாரை வாதத்தில் வென்றார். பின் துவாரகையில் சிவவிஷ்ணுவின் அபேதத்தை போதித்து ஒரு மடத்தை ஸ்தாபித்தார். அது காளிகா பீடம் எனப்படும் ஞானபீடமாகும். அங்கு விளங்கும் ஆசாரியர்களுக்கு 'ஆசிரமி' என்ற துறவுப்பட்டம் உண்டு. உஜ்ஜைனியில் பட்டபாஸ்கராசாரியரையும் பாணர் மயூரர் தண்டி முதலானவர்களையும் வாதத்தில் வென்றார். ஜகந்நாதத்தில் ஒரு மடம் ஸ்தாபித்தார். அஸ்ஸாமில் காமரூபத்தில் வாதத்தில் அபிநவ குப்தரை வென்றார். தோற்ற அபிநவகுப்தர் சங்கரர்மேல் ஏவல் கர்மஞ்செய்து மூலநோயுண்டாக்கினர். நோய்க்கு பரிகாரம் செய்துகொள்ள வேண்டும் என மாணக்கர்கள் வேண்டினர். பிராரத்துவ கருமத்தால் வந்த நோய் அனுபவித்துக் தொலைக்கத்தக்கது என்று கூறி மறுத்தார். தோடகர் பத்மபாதர் முதலிய முக்கிய சிஷ்யர்கள் இது நோயல்ல, ஏவல் எனக்கண்டு மகா மந்திரத்தைச் செபிக்க மூலநோய் சங்கரரிடமிருந்து ஏவிய அபிநவ குப்தரை பிடித்து கொன்றுவிட்டது. பின் சங்கரர் கைலாசம் சென்று ஸ்ரீ சந்திர மௌலீசுவர பஞ்ச லிங்கங்களைப் பெற்று, முக்தி லிங்கத்தை பத்ரிகாசிரமத்திலும், வரலிங்கத்தை நேபாளத்திலிருக்கும் நீலகண்ட க்ஷேத்திரத்திலும் மோக்ஷலிங்கத்தை சிதம்பரத்திலும், போக லிங்கத்தை சிருங்கேரியிலும், யோக லிங்கத்தை காஞ்சீபுரத்திலும் ஸ்தாபித்தருளினர் கிம்புருஷகண்டத்தில் பிரம்ம ராக்ஷஸனுக்கு பிரம்மஹத்தியை ஒழித்தருளினர் பத்மபாதருக்கு பூகோள காகோள உண்மைகளை துருவநிலை கிரகமண்டலம் முதலிய கதிநிலைகளையும் உணர்த்தினர். கௌடபாதாசாரியார் தோன்றி தாம் இயற்றிய மாண்டுக்கிய உபநிஷத் காரிகைக்கு சங்கரரின் பாஷியத்தை நேரில் கேட்டு இன்புற்று ஆசிர்வதித்தார். வடமதுரை பிருந்தாவனம் போன்ற திருப்பதிகளுக்கு சென்ற பிறகு காஷ்மீரத்திற்கு யாத்திரை சென்றார்.

ஜீவன் ஈசுவரன் இவை இரண்டும் வேறு வேறு என்ற சைவத்தின் கொள்கையையுடைய நீலகண்டரும் அவரது சீடர்களும் அத்வைத கொள்கையினை ஏற்குமாறு சங்கரர் செய்தார் முக்தி என்பது சர்வ துக்க நிவர்த்தி மட்டுமல்லபரமானந்தப்ராப்தியும் கூட என்பதை உணர்ந்து மகிழ்ந்தனர் வைணவர்களின் கொள்கைப்படி ஐந்துவகை பேதங்கள் உண்டு அவையாவன 1 ஒரு ஜீவனுக்கும் மற்றொரு ஜீவனுக்கும் இடையே பேதம். 2 ஜீவனுக்கும் ஜடப்பொருளுக்கும் பேதம் 3 பகவானுக்கும் ஜடப்பொருளுக்கும் இடையே பேதம் 4 ஒரு ஜடப்பொருளுக்கும் மற்றொரு ஜடப்பொருளுக்கும் இடையே பேதம் 5 பகவானுக்கும் ஜீவனுக்கும் இடையே பேதம் இப்படியான

துவைதத்தன்மையாகிய பேதங்களை சங்கரர் வாதப்பூர்வமாக நிராகரித்தார்
அவித்தையின் இருப்பிடம் எது? பரமாத்ம ஜீவனா என்ற சர்ச்சையின்
இறுதியில் அவித்தை என்றும் பிரகிருதி என்றும் கூறப்படுவது சுத்த சைதன்-
யத்தையே சார்ந்தது என்ற சங்கரரின் வாதம் ஏற்கப்பட்டது, ஒருகையில்
ஐந்து விரல்கள் ஒன்றுக்கொன்று பேதமாயினும் செயலாற்றும்போது
அபேதமாய் ஆவது போன்று பேதத்தில் ஒருமை என்ற கருத்து சுவையான
விவாதமானது பிரஹ்மத்தைத் தவிர இரண்டாவது வஸ்து இல்லை என்று
அனுபவ பூர்வமாகவும் புத்தி பூர்வமாகவும் உணருவதே சச்சிதானந்த நிலை
ஜீவனது அளவு உடம்பின் அளவே என்ற ஜைனர்கள் தங்களது ஏழுவகை-
யான கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வாதிட்டனர். சங்கரர் அவர்களது
முரணான விஷயங்களை எடுத்துக்காட்டி, ஆத்மா அழிவற்றது என்பதையும்
முக்தி என்ற நிலையையும் விளக்கி அவர்களையும் ஈர்த்தார். ஜனங்களின்
ஆத்மீக வாழ்வை சிறக்கச்செய்து மனிதன் தெய்வமாகலாம் என்று மாத்திரம்
கூறாமல் மனிதன் தெய்வமே என்று கூறி ஆத்மாவின் உயர்ந்த இடத்தை
யாவரும் அறியும்படி செய்தார்.

காஷ்மீரத்தில் உள்ள ஸ்ரீநகரத்தில் சரஸ்வதிதேவியின் ஆலயத்தின்
கிழக்கு, வடக்கு, மேற்கு பக்கங்களின் வாயில்களை ஏற்கனவே அப்பக்கத்தின
ரினால் திறக்கப்பட்டிருக்க, தெற்கு பக்கத்திலுள்ள வாயில் முற்றுணர்வு
உடையோர் எவரும் இன்னும் திறக்காததை உணர்ந்த சங்கரர், அங்கு
நேரில் சென்று, கோவிலின் ஒவ்வொருபடியிலும் பண்டிதர் வடிவில் வெவ்-
வேறான வகைகளின் வித்தைகளின் நுணுக்கமான கேள்விகள் கேட்கப்பட்ட-
தற்குத் தகுந்த பதில் கூறிவிட்டு மேலே செல்லும்படி தடுத்தவர்களுக்கு,
ஒவ்வொரு வித்தையிலும் அவரவர்களுக்கு திருப்தியாக விடைகள் கூறிவிளக்கி
சர்வ வித்தையிலும் முற்றுணர்வுடைமையைக் காண்பித்தார். சாரதாதேவி
அசரீரியாக கோயிலுக்குள்ளிருந்து கேட்ட கேள்விகளுக்கும் தகுந்த மறு-
மொழி கூறி பின் தெற்குப் பக்கத்து கதவு வழியாக சர்வஜ்ஞ பீடத்திலேறி
அமர்ந்து பூமண்டல ஆசாரியத்தலைவர் என்னும் விருதுடையவராய் புகழப்-
பட்டார், அறிஞர்களுக்கும் பக்தர்களுக்கும் அறநெறி உபதேசங்கள் புரிந்தார்
சங்காரர் தமது நாட்டுக்கு விஜயம் செய்ததன் நினைவாக காஷ்மீரத்து மன்னர்
அங்கிருந்த அழகிய குன்று ஒன்றுக்கு சங்கராசாரியகிரி என திருநாமம்
சூட்டி அங்கு ஓர் ஆலயமும் கட்டுவித்தான். பின்னர் பத்திரிநாத்திற்குப்
புறப்பட்டுச்சென்று சங்கரர் பத்ரிநாதனை தரிசித்து மகிழ்ந்தார். அங்கே தவ-
மிருந்த தமது குருநாதர் கோவிந்தபகவத்பாதரையும் மற்றும் பரமகுரு
கௌடபாதரையும் தரிசித்து மகிழ்ந்தார் அடுத்துச்சென்ற கேதாரஸ்தலத்
தில் தமது மாணாக்கர்கள் குளிரைத்தாங்கமுடியாமல் வருந்துவதைப்பார்த்து
மனமிறங்கி அங்கு ஓர் வெந்நீர் ஆற்றை உண்டாக்கினார். அந்த வெந்நீர்
நதி இப்போதும் ஓடிக்கொண்டிருக்கிறது. துவாரகை மடத்திற்கு பத்மபாதா
சாரியரையும் ஜகந்நாத மடத்திற்கு அஸ்தாமலகாச்சாரியரையும், பத்ரிகாசி
ரமத்திற்கு தோடகாசாரியரையும் தலைவர்களாகவும், சுரேசுவராசாரியரை
சிருங்கேரி மடத்திலும் இருந்து வரும்படி நியமித்தார் ஜகத்குரு ஆசாரியர்
சங்கரர் 32 வயது நிரம்பிவிட்டதும் தாம் அவதரித்த காரியங்கள் எல்லாம்
குறைவற நிறைவேற்றிய திருப்தியுடன் ரத்தாக்ஷி ஆண்டு வைகாசி மாதம்
சுக்கில பட்ஷம் ஏகாதசி தினத்தன்று அன்னை காமாட்சியின் தரிசனத்தைப்-
பெற்று ஆசியை ஏற்றுக்கொண்டு மனநிறைவோடு தேவர்கள் அனுப்பிய ரிஷப
வாகனத்தில் ஆரோகணித்து,மஹரிஷிகள் நமஸ்கரிக்க திருக்கைலாயத்திற்கு
எழுந்தருளினர்.

ஓம் ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த அத்வைத ஜோதிஸ்வரூப
ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரிய ஸ்வாமினே நமோ நம:

24 ஆத்ம தத்துவங்கள் :-
5 தந்மாத்திரைகள் : ஓசை, ஊறு, ஒளி, சுவை நாற்றம்
5 பூதங்கள் : ஆகாயம், காற்று, அக்கினி, ஜலம், பூமி
5 ஞானேந்திரியங்கள் : செவி மெய் கண் நாக்கு மூக்கு
5 கர்மேந்திரியங்கள் : வாய் [வாக்கு] கை கால் மலவாய் கருவாய்
4 அந்தக்கரணம் : அகங்காரம் (முனைப்பு) சித்தம் [நினைவு] புத்தி மனஸ் [+1 உள்ளம்] 25

10 வாயுக்கள் : வியானன் [தொழிற்காற்று] பிராணன் [உயிர்க்காற்று] அபானன் [மலக்காற்று] சமானன் [நிரவுக்காற்று] உதானன் [ஒலிக்-காற்று] நாகன் [விழிக்காற்று] கூர்மன் [இமைக்காற்று] கிருகரன் [தும்மல் காற்று] தேவதத்தன் [கொட்டாவிக்காற்று] தனஞ்சயன் [விக்கல்காற்று] [+2 அந்தர்யாமி [ஜீவிதனுக்கு வாகனமாய் இருந்து பிராண வாயுவை தோற்றுவிக்கும் அடையாணி] பிரவஞ்சனன் [பிரணவத்திற்கு இருப்பிடமாக இருக்கும் அச்சாணி)] 12

9 உடலின் வாசல்கள் : வலச்செவி, இடச்செவி, வலக்கண், இடக்கண் வலது மூக்கு, இடது மூக்கு, அன்னவாய், மலவாய், கருவாய் [+2 மரண-காலத்தில் நரகம் சேர்க்கும் தொப்பூழ், சொர்க்கம் சேர்க்கும் ஸஹஸ்ராரம் தலையுச்சி] 11

10 நாடிகள் [நரம்புகள்] : இடகலை [இடதுமூச்சு நரம்பு] பிங்கலை [வலது மூச்சு நரம்பு] சுழுமுனை [மேலான நடுமூச்சு நரம்பு] உள்நாக்கு நரம்பு இடக்கண் நரம்பு, வலக்கண் நரம்பு, இடச்செவி நரம்பு, வலச்செவி நரம்பு மலவாய் நரம்பு, கருவாய் நரம்பு 10

8 விகாரங்கள் [உட்பகைகள்]: ஆசை, சினம், கருமித்தனம், கருமித்தனம் மயக்கம், வெறி, பொறாமை டம்பம் [தேகமே ஆத்மா எனும் புத்தி] அகங்-காரம் [பணிவின்மை] [+2 தர்ப்பம் [காம்ய கர்மம்] ஈஷிஷை கேடுநினைத்தல் 10

6 ஆதாரங்கள் : மூலாதாரம் சுவாதிஷ்டானம் [குய்யம்] மணிபூரகம் [கொப்பூழ் நாபி] அநாகதம் [இருதயம்] விசுத்தம் [மிடறு அடிநாவு] ஆக்ஞேயம் [புருவநடு] [+2 மனோன்மணி [உள் சிறுநாக்குக்குமேல்] ஸஹஸ்-ராரம் [பிந்து சக்ரம் சிவசக்தி ஐக்கிய பாவத்திற்குரியது] 8

7 தாதுக்கள் : இரசம் [சர்மம்-துவக்கு] இரத்தம் [செந்நீர்] மாமிசம் [ஊன்-சதை] மேதஸ் [கொழுப்பு] அஸ்தி [எலும்பு] மச்சை [மூளை] வெண்ணீர் [ஆண் அல்லது பெண் இன்பச்சுரப்பு] 7

5 அவஸ்தைகள் : சாக்கிரம் [நனவு] சொப்பனம் [கனவு] சுழுத்தி [ஆழ்-ந்த உறக்கம் துரியம் [அந்தக்கரணம் ஒன்றுடனே ஜீவாத்மா நாபிஸ்தான-த்தில் நிற்கும்போது உஸ்வாஸ நிஸ்வாசஸ் மூச்சுக்கள் ஊனைத்தவிர்த்து ஒளிந்திருக்கும் நிலை] துரியாதீதம் [இயந்திரங்கள் பத்தும் அந்தக்கரணங்-களும் பற்றற்று ஜீவாத்மா தானே மூலாதாரத்தில் சென்றொடுங்கி மலம் மதம் மாயை ஸ்பர்சங்கள் எதையும் அறியாமல் நிற்கும் உயிர்ப்படக்கநிலை] 5

5 கோசங்கள் : அன்னமய கோசம் [உணவுடம்பு] பிராணமய கோசம் [காற்றுடம்பு] மனோமய கோசம் [மனவுடம்பு] விஞ்ஞானமய கோசம் [புத்தியுடம்பு] ஆனந்தமயகோசம் [இன்பவுடம்பு] 5

3 மலங்கள் : ஆணவம் [தான் தனது என்னும்] மாயை [பிறர் உடைமைகளை தனதென்னும்] கன்மம் [காமியம் இதா கிதத்தினால் புண்ணியம் பாவங்களை விளைவிக்கும்] 3

3 பிணிகள் : கபம் [நீர் நெருப்பு காற்று மூன்றும் உடலில் கலவாமல் கலங்கி நிற்கும் அது சிலோத்துமம்] வாயு [வாயுக்கோளாறு] பித்தம் [உஷ்ணக்கோளாறு] 3

3 மண்டலங்கள் : சந்திரமண்டலம் [ஸஹஸ்ராரம்] ஆதித்திய மண்டலம் [சூரிய மண்டலம்-இருதய கமலம்] அக்கினி மண்டலம் [நாபிக்குக்கீழ் மூலாதாரத்திற்கு மேல்-குய்யம்:] 3

3 குணங்கள் : 1 சாத்விகம்-வாய்மை கருணை பொய்யாமை கொல்லாமை களவின்மை கோபமின்மை ஆடம்பரமின்மை பொறுமை ஜீவகாருண்யம் விரதம் அடக்கம் ஆனந்தம், அழுக்கற்றது ஒளி பொருந்தியது இடர்படுத்தாதது. சுகப்பற்றுதலாலும் ஞானப்பற்றுதலாலும் பிணைக்கிறது, ஞானம் உதிக்கிறது. மேலேறி நல்லுலகம் அடைவான், 2 ராஜசம்-நானே கர்த்தா நானே பிரபு என்னும் அகங்காரம் அதிக களிப்பு போகம் தேகமே ஆத்மா என்னும் டம்பம் சுவிதசேதம் புகழ் வீரம் ஈகை,ஆசை வடிவம் வேட்கையையும் பற்றுதலையும் உண்டுபண்ணுவது வினைப்பற்றால் தேகியை தளைக்கிறது கர்மத்தில் சேர்க்கிறது. பேராசை லோபம் இந்திரியங்கள் வாயிலாக வெளியுலக விவகாரங்களில் முனைந்துபோதல் ஆகிய பிரவிருத்தி வினைப்பெருக்கு அமைதியின்மை, பயன் துன்பம் வினையில் விருப்பம் காமப்பற்று உடையவர்களுக்கிடையில் பிறக்கிறான் இடையில் நிற்கின்றனர். 3 தாமசம் தூக்கம் சோம்பல் அலட்சியம் ஆலஸ்யம் [ஊக்கமின்மை] மோகம் சம்போகம் திருட்டுத்தனம் கள்ளுண்ணல் கோபம் நாஸ்திகபுத்தி தீய அகங்காரம் அறியாமை அந்தக்காரம், அக்ஞானத்தில் பிறந்தது உயிரை மயக்குவது ஞானத்தை மறைத்து கவனமின்மையில் இணைக்கிறது, விவேகமின்மை முயற்சியின்மை தவறுதல் மதிமயக்கம் அறிவிலிகள் கர்ப்பத்தில் மறுபடி பிறக்கிறான், கீழிறங்குகின்றனர். 3

— [+2 காந்தசக்தி (கவரும் தள்ளும் வடக்கு தெற்கு முனைகள்)]
மின்சக்தி (பாய்ந்து செயலாற்றும் ஒடுக்கும் ஒடுங்கும்)] 2

— [+1 ஜீவாத்மா (கடவுள் - ஸ்ரீபரப்பிரம்மம்-ஆத்மா)] 1

96 உடலின் தத்துவங்கள் [+12] 108

27 பிரம்ம சமஸ்டி தத்துவங்கள் ஜீவனுடன்

6 ஸ்தூல சரீரம் - சர்மம் [தோல்], இரத்தம், ஊன் [மாமிசம்] நரம்பு, எலும்பு மஜ்ஜை [மூளை] இவையாவும் சேர்ந்த காணப்படும் உடல்

19 சூட்சும சரீரம்-கர்மேந்திரியங்கள் 5, வாயுக்கள் 5, ஞாநேந்திரியங்கள் 5, அந்தக்கரணங்கள் 4, ஆக 19 காணப்படாத சூட்சும உடல்

1 ஜீவன், ஜீவாத்மா, கடல் அலைநீர்த்திவலை தோன்றி இருந்து மறைவது, அத்திவலைகளில் தோன்றும் பலகோடி சூரிய பிரதிபிம்பங்கள், மண் குடத்திலிருக்கும் ஆகாசம்.

1 பிரம்மம், சமஸ்டி ஆத்மா, சத்து சித்து ஆனந்தம் நித்தியம் பூரணம்.

27 பிரம்மம் அறிவு விடாயைத் தீர்க்கக்கூடிய உள்ளுணர்வு அனுபவம்

தனித்தன்மையற்ற பரம்பொருளாயினும் சரி அல்லது தனித்தன்மையோடு கூடிய இறைவன் ஆயினும் சரி, அது முழுப்பேறேயாகும், நான் என்ற எண்ணச்சிறுமைக்கு அந்த தெய்வீக வெள்ளத்தில் இடமில்லை. மனதுக்கும் மேலான உள்ளுணர்வால் அறியக்கூடிய ஆன்மீகப்பார்வை நமக்கும் கிட்டும் பேறு கிடைத்தால் இறைவன் நமக்கு உண்மையிலும் உண்மையாவான். வெவ்வேறு விளக்குகளில் வெவ்வேறு வகையான எண்ணெய் ஊற்றப்பட்டிருந்தாலும் வெவ்வேறு வகை திரிகள் இடப்பட்டிருந்தாலும் விளக்குகள் எரியத்தொடங்கும்பொழுது நமக்கு ஒரே நெருப்புத்தான் கிடைக்கிறது. ஒளியும் ஒன்றுகத்தான் இருக்கிறது. தவம் செய்யச்செய்ய அகங்காரத்தை ஆகுதியாக்கி விடுவார்கள், அதற்கு நேர்மாறுக அதிகரித்துக்கொண்டு வரும் அகங்காரம் அவனையே அடியோடு சாம்பலாக்கி விடாமல் குளிர்வித்துவிடச்-செய்யவேண்டும். நற்செயலால் சம்பாதித்துக்கொள்ளும் மரியாதை பிறப்புரிமையாகப் பெறப்படும் மரியாதையை விடப் போற்றத்தக்கது.

ஓம் [ப்ரணவம் கடவுள்] பூர்ப்புவஸ்ஸுவ : [அண்டங்கள் வடிவிலுள்ள வ்யாஹ்ருதியும் கடவுள்] தத் ஸ்விதுர்வரேண்யம் [அந்தப்படியான அனைத்தையும் படைக்கின்றவரான மிகவும் சிறந்த உயர்ந்ததான்] பர்கோ தேவஸ்யதீமஹீ [ஜோதீஸ்வரூபமான தேஜஸ் கடவுளாகிய பரிபூரணத்துவத்தை முக்காலும் தியானிக்கின்றோம்] த்யோயோ ந:ப்ரசோதயாத் [அவரே ஜீவன்களின் எண்ணங்களாம் அந்தக்கரணங்களை தூண்டுவித்து பிரகாசிக்க செய்விக்கின்றார்.]

ஓம் நமோ பகவதே கிருஷ்ணாய வாசுதேவாய கோபிகாலோலா
அம் உம் சௌம் ஸ்ரீ விஷ்ணு வம்சதிலக
ஸ்ரீஹரி க்லீம் வசி வசி வசி ஸ்வாஹாஹா

சர்வ மங்கல மாங்கல்யே சிவே சர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
17	3	பிர்மாமா	பிரமாணமா
17	20	வீஞகி	வீஞகி
17	24	குமாரிலிப்பட்டர்	குமாரிலபட்டர்
19	8	மளவொருமை	மனவொருமை
20	2	தவிப்பதற்கு	தவிர்ப்பதற்கு
20	23	உடலுக்குக்சிடையாது	உடலுக்குக்கிடையாது
20	26	பொருள் வேண்டும்	பொருள் கொள்ள வேண்டும்
20	27	தவனே	தவணே
20	34	என்லும்	என்னும்
21	9	சாந்நித்தியாய்	சாந்நித்தியமாய்
21	39	பரசுபத	பாசுபத
21	40	சாந்தேய	சாக்தேய
22	24	காணல்	கானல்

தேனீ தனது கூட்டில் அல்லது தேன் சேகரிக்கத்தகுந்த மலர்களில் மட்டுமே அமரும் உடல் சுத்தமாக வைத்திருக்கும் அசுத்தமான இடங்களில் அமராது மகரந்தங்களை மாற்றிப்பொருத்தி செடி கொடிகள் விருத்திக்கும் உதவும் ஜீரணிக்க கடினமான பகுதிகளை தான் உண்டு ஜீரணிப்பது தேனை உயர்ந்த மருந்தாகஇனிமையானதாக ஜீரணிக்கஎளிமையானதாகமக்களுக்குவழங்கும்

சுறுசுறுப்புக்கு பெயர் போன எறும்புகள் தன் எடையைப்போன்று பல மடங்கு சுமையை தூக்கிச்செல்லக்கூடியது அவற்றின் ஒன்றுக்கொன்று உதவி பாதுகாக்கும் போர் வீரர்கள் செவிலியர் என சமுதாய கட்டுக்கோப்பு பிரமிக்கத்தக்கது

பசுக்கள் பல வண்ணமாயினும் சாத்வீக சைவ உணவுகளை மட்டுமே உண்டு தன் உடலெங்கும் ஊறும் அமுதமான பாலை மடிவழியே பெரும்பகுதி மனிதர்களுக்கே வழங்கி உதவுகின்றன. கண்ணுக்குத்தெரியாமல் பாலில் மறைந்திருக்கும் மணமான சுவையான ஊட்டமான நெய்யை சிரமப்பட்டு காத்திருந்து சேகரித்து அனுபவிப்பது போன்று, நிஷ்காம்யமாய் கடமைகளை செய்து பொருமை, விவேகம் வைராக்கியத்துடன் ஆத்ம தியானத்தால் ஞானமடைந்து ஆனந்தித்திருக்கலாம்.



மலர்களை தொகுத்து ஞானதானமாக விநியோகிக்கும் அன்பர்
திருமதி & திரு R. T. P. ராமநாதன் பொது மேலாளர்
436, சேலம் மெயின்ரோடு, கொமாரபாளையம்-638183.

கிருதயுகத்தில் கபிலாசாரியார், திரேதாயுகத்தில் தத்தாத்திரேயர், துவாபரயுகத்தில் வியாசர், கலியுகத்தில் ஆதிசங்கரர் என சமஸ்கிருதத்திலும், திருவள்ளுவர், திருமூலர், கம்பர், ஆண்டாள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தர்கள் என தமிழகத்திலும் வேதாந்த அர்த்தங்களை விளக்கி அருள்புரிந்த மெய்ஞானியர்களுக்கும் இக்கால கட்டத்-தில் ஆத்மீகச்சுடரை சாதகராயினோரிடத்து ஞானம் தூண்டுவித்து வந்த நெரூர் ஸ்ரீ கைலாச ஆஸ்ரம ஸ்தாபகரும் குமாரபாளையம் ஆனந்தாஸ்ரமம் போஷகராயும் இருக்த ஸ்ரீலஸ்ரீ சதாசிவானந்த சுவாமிகள் (1908-1985). தொடர்ந்து ஸ்ரீ கைலாச ஆஸ்ரம தலைவராகவும் இன்னும்பல ஊர்களில் ஹிந்துமத ஸ்தாபனங்களுக்கு முக்கிய உறுப்பினராக இருக்கும் தவத்திரு தேஜோ மயானந்தா மேலும் குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும் ஆனந்தாஸ்ரம குரு ஆசாரியராயிருந்து தினந்தோறும் வரிசைக்கிரமமாக கோவிலூர் மரபு 16 சாஸ்திரங்களையும் நடத்திவரும் தவத்திரு சோம. கோபாலசுவாமி அவர்கள் இன்னும் மறைபொருளாகச் சுருங்கச்சொல்லி விளங்க வைத்த மகரிஷிகளுக்கும், அவைகளுக்கு விளக்கங்கள் கொடுத்துள்ள பெரியோர்களுக்கும் எனது மானசிகமான சாஸ்டாங்க நமஸ்காரங்கள் உரித்தாகுக.



Acc no 18086

குருர் ப்ரஹ்ம குரூர் விஷ்ணு : குருர் தேவோ மஹேஸ்வர :

குரூர் ஸாக்ஷாத் பரப் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருவே நம :

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரி மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் கஜானனாய மங்களம்
ராஜாராம மங்களம் வேணுகிருஷ்ண மங்களம்
சீதாராம மங்களம் ராதாகிருஷ்ண மங்களம்